# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

நவம்பர் 2002 ஜீவியம் 8 மலர் 7

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| லைப் டிவைன் | 18 |
| இம்மாதச் செய்தி | 22 |
| அஜெண்டா | 23 |
| அன்பரும் - நண்பரும் | 25 |
| அபரிமிதமான செல்வம் | 36 |
| சாவித்ரி | 41 |
| சரணாகதி சமாதியைக் கடந்தது | 43 |
| அன்பர் கடிதம் | 53 |
| புலன்களுக்குப் புலப்படாதது | 55 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 57 |

☆ ☆ ☆

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

## 736) சிந்தனை மூளையின் செயல். சிந்தனைக்குரியவன் (மூளையின்) ஜடத்தின் செயலால் நிர்ணயிக்கப்படுவான்.

*சிந்தனைக்கு சிறப்பல்ல.*

உடலசைவுகளைவிடச் சிந்தனை உயர்ந்தது. அது நம் வாழ்வை உடலிலிருந்து மனத்திற்கு மாற்றும். அதற்கடுத்த கட்டம் உண்டு. இங்குச் சிந்தனையை உடலுக்குரிய செயலாகக் கருதி, அதைவிட உயர்ந்த நிலையை அடைய முடியும் எனக் காட்டப்படும்.

படிக்காதவனைவிடப் படித்தவன் உயர்ந்தவன். பட்டத்திற்காகப் படித்துப் பட்டம் பெற்றவனைவிட அறிவுக்காகப் படித்தவன் அதிக உயர்வுள்ளவன்.

ஊர்ப் பஞ்சாயத்தைவிட முனிசிபல் சட்டம் சர்க்கார் அதிகாரத்தைச் செலுத்தும். முனிசிபாலிட்டியிலும் ஊரார் இருப்பதால், அதைவிட கோர்ட் சர்க்கார் அதிகாரத்தை நல்ல முறையில் செலுத்தும்.

**சிந்திப்பவன் வாழ்வு ஜடத்திற்குக் கட்டுப்படாமல்**
**மனத்திற்குக் கட்டுப்படும்.**
**சிந்தனையின்றி மௌனமானவன் வாழ்வு ஆன்மாவுக்குக்**
**கட்டுப்படும்.**

செயலிலிருந்து சிந்தனைக்கும், சிந்தனையிலிருந்து மௌனத்திற்கும் மனிதன் நகர்ந்து வந்தால் ஜடத்திலிருந்து மனத்திற்கும், மனத்திலிருந்து ஆன்மாவுக்கும் அவன் வாழ்வு மையம் நகர்ந்துவரும்.

(Intellect is inert) அறிவு ஜடத்தின் உணர்வு என்பது பகவான் கூற்று. இரு நூற்றாண்டுகட்கு முன் உலகம் மூடநம்பிக்கையில் மூழ்கியிருந்தது. அம்மனிதர்களைப் பார்த்து பாரதி நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மாந்தரை நினைத்தால் என்றான். எங்கும் அவனுக்குப் பிசாசு தெரியும். பிசாசின் வகைகளைப் பிரித்து கதை எழுதுவான். “பெரிய துரை எனில் உடல் வேர்ப்பான்” என்பவை இந்நாட்டு நிலை. ஐரோப்பாவில் பாதிரிமார் ஆட்சி நிலவியது. அவர்களை மக்கள் நம்பியதால் அவர்கள் சொல்லிய “கதைகள்” அனந்தம். அரசனே அவர்களை எதிர்க்க முடியாத நிலையும் ஏற்பட்டது. பைபிளைப் படிக்கவும் அமைதியில்லை. பாதிரிகள் மட்டுமே பைபிளைப் படிக்கலாம். இந்தியாவில் வேதத்தைப் படிக்க அனுமதியில்லை.



விஞ்ஞானம் இந்த மூடநம்பிக்கையை எதிர்த்தது, உடைத்தது. பாதிரிகளிடமிருந்து மனிதனுக்கு விடுதலை கொடுத்தது. ஆராய்ச்சியை மேற்கொண்டது. ஆயிரம் மருந்துகளைக் கண்டுபிடித்தது. வலியை வென்றது. நோயை வென்றது. புயலையும், வெள்ளத்தையும், அம்மையையும், காலரா, பிளேக்கையும் வென்று வருகிறது. இலட்சக்கணக்கான விந்தைகளைப் புரிந்து வாழ்வை சுவர்க்கமாக்கிற்று. நூறாண்டில் நாம் பெற்ற சௌகரியம் கணக்கில் அடங்காதது. இது மனிதன் உடலசைவுகளைவிட்டுச் சிந்தனையை நாடியதைப் போன்றது. பகவான் விஞ்ஞானத்தை “மூடநம்பிக்கை” என்கிறார். அதன் சாதனைகள் “மூளை” intellect, physical mind, ஜடத்தின் சாதனை என்கிறார். மூளையைக் கடந்து அறிவுக்கு வந்தால், சிந்தனையைக் கடந்து ஆன்மாவுக்கு வரலாம். Divine Life தெய்வீக வாழ்வு அதனடிப்படையில் ஏற்பட்டது. மூடநம்பிக்கைக்கும் விஞ்ஞானத்திற்கும் உள்ள மாற்றம் விஞ்ஞானத்திற்கும், சிந்தனையைக் கடந்த அறிவுக்கும் உண்டு. அதையே பூரண யோகம் நாடுகிறது.

சிந்தனை என்றால் என்ன? அது எதன் செயல்? மூளை என்பது மனத்தின் பீடம். மூளை என்பது தசையாலான உறுப்பு. சிந்தனை அதன் செயல். கண் உறுப்பு, பார்வை அதன் செயல் என்பதுபோல், மூளை என்பது ஜடமான கருவி.

❂ *தத்துவம் மனத்தின் எண்ணம்.*

❂ *சிந்தனை மூளையின் செயலான எண்ணம்.*

மூளையைச் செயல்பட வைப்பன புலன்கள். கண் பார்க்கிறது, காது கேட்கிறது. நாம் ஒருவரைப் பார்க்கிறோம். கண் அவர் உருவத்தை மூளைக்குச் சொல்கிறது. உண்மையில் பார்ப்பது கண் அன்று, மூளையே. மூளை கண்மூலம் பார்க்கிறது. நாம் பார்த்தவர் உருவம் மூளையில் பதிகிறது. அது புலனறிவு. இப்புலனறிவின் அடிப்படையில் மூளை செயல்படுவது சிந்தனையாகும்.

மனம் என்ன செய்கிறது? நாம் பார்த்தவர் உருவம் உயரமானது, கனமானது என்றால், புலன் கொடுத்த உயரம், எடையை ஒதுக்கிவிட்டு - புலனறிவை விலக்கி - மனம் மூளையிலிருந்து உயர்ந்து சிந்திப்பது சிந்தனை. **இது மனதிற்குரிய சிந்தனை.** பார்த்தவர் உருவமும், எடையும் மூளைக்கு அதிர்ச்சி தருகிறது, பயம் எழுகிறது, உடல் பயத்தால் நடுங்குகிறது. **மூளையின் செயல் இம்மனிதன் செயலை நிர்ணயிக்கின்றது.**

மனம் மூளையிலிருந்து விடுபடும் தன்மையுடையது. உயரம், எடையைப் புறக்கணித்து மனம் "யார் இது?" எனக் கேட்கிறது. இவன் கூலி வேலை செய்பவன் என்ற பதில் மனத்தை நிதானமாகச் செயல்படச் செய்கிறது. **இம்மனிதனை ஜடமான மூளை நிர்ணயிக்காது.**

ஸ்ரீ அரவிந்தம் பொதுவாக மனித நம்பிக்கையின் அடிப்படையை மாற்றி, மனம் உடலை நிர்ணயிக்கிறது என்று கூறுகிறது. நாம் உடல் மனத்தை நிர்ணயிக்கிறது என்று நம்புகிறோம்.

Matter என்ற அத்தியாயம் Life Divineஇல் கடினமானது. Knot of Matter அடுத்தது. Matter என்ற அத்தியாயத்தில் Matter சச்சிதானந்தம் என்று முடிகிறது. Knot of Matter என்ற அத்தியாயத்தின் முடிவில் மனிதன் ஜடத்தைப் பற்றிய கருத்தை மாற்றிக்கொண்டால், ஜடம் திருவுருமாறும், ஜடம் சச்சிதானந்தமாகும்.



ஜடம் சச்சிதானந்தமானால் Kingdom of heaven on earth பூலோகம் சுவர்க்கமாகும். அதன் இதர அம்சங்கள்:

❂ *மனிதன் சிந்தனையைக் கடந்தால் தெய்வமாவான்.*

❂ *சமூகத்தை முடிவாகக் கருதாமல், மனத்தையே முக்கியமாக மனிதன் கருதுவதைத் தவிர்த்தால், உலகில் வறுமையிருக்காது, கவலை சந்தோஷமாக மாறும்.*

☆ ☆ ☆

## 737) மனத்தின் தலையாய செயல் சிந்தனையில்லை, புரிந்துகொள்வதாகும். சிந்தனையின்றிப் புரிந்தால் மனம் உடலை நிர்ணயிக்கும்.

***சிந்திக்காதே, புரிந்து கொள்.***

உடலின் முக்கியக் கடமை செயல். உணர்வின் தலையாய கடமை செயலுக்குரிய சக்தியை அளிப்பது. அதுபோல் மனத்தின் முதல் பொறுப்பு செயல் அன்று, சக்தியைத் தருவதில்லை, புரிந்து கொள்வது.

சிந்தனையில் ஆரம்பித்து புரிவதில் முடிவது மனத்தின் வாழ்வு. நாம் சிந்தனையில் ஆரம்பித்து, சிந்தனையிலேயே நின்றுவிடுகிறோம். கல்லூரிக்குப் போன மாணவன் 4 வருஷத்திலோ, 8 வருஷத்திலோ படிப்பை முடித்துவிட்டு வாழ்வை ஆரம்பிக்கவேண்டும். 30, 40 வருஷமாகப் படித்துக்கொண்டேயிருப்பது வாழ்வாகாது, முறையாகாது.

நாம் சிந்தித்துக்கொண்டேயிருப்பதால் திறனற்றவராகிறோம். 20 ஆண்டாக ஒருவன் படித்துக்கொண்டிருந்தால் குடும்பம் அவன் செலவை ஏற்கும், குடும்பத்திற்கு அவன் கட்டுப்படவேண்டும். 6ஆம் வருஷம் படிப்பை முடித்து வேலைக்குப் போயிருந்தால், 14ஆம் வருஷம் குடும்பம் அவனுக்குக் கட்டுப்படும்.

- ❂ சிந்தனை ஆரம்பத்தில் அவசியம்.
- ❂ சிந்தனை புரிவதில் முடியவேண்டும்.
- ❂ தொடர்ந்த சிந்தனையால், புரிந்துகொள்ளும் திறமை போய்விடும்.
- ❂ சிந்திப்பதை நிறுத்தி, புரிந்துகொள்ள முயன்றால், செயல் உருவாகும்.
- ❂ செயல் மனத்தால் உருவாக்கப்பட்டால், மனம் தலைமை தாங்கும், உடல் கட்டுப்படும்.
- ❂ இது வாழ்வு முன்னேற உதவும்.
- ❂ சிந்திப்பது தொடர்ந்தால் உடல் மனதை நிர்ணயிக்கும்.
- ❂ உடல் மனத்தை நிர்ணயித்தால், படிப்பில்லாதவன் நாட்டின் தலைவனாகி ஆட்சி செலுத்துவது போலாகும்.
- ❂ நாம் குடும்ப வாழ்வில் முன்னேற, அறிவின் அடிப்படையில் வாழ்வை அமைக்க, தேவையற்ற சிந்தனையை நிறுத்தி, புரிந்துகொள்ள முயன்று, அதன் அடிப்படையில் நடந்தால் வாழ்வு வளம் பெறும், அதிர்ஷ்டம் பிறக்கும்.

மனம் என்ற சொல் மனஸ் என்ற சமஸ்கிருதச் சொல். 5 புலன்களின் மையம் மனம். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் உணர்வுகளை மூளையில் அறியும் திறன் மனம். மனம் புலனுணர்வை அறியும் பாகம். புத்தி என்பதே அறிவுக்குறைவிடம். நடைமுறையில் நாம் மனம் என்ற சொல்லை mind என்பதின் தமிழாக்கமாகப் பயன்படுத்துகிறோம். Mind என்பது மனமும் புத்தியும் சேர்ந்ததாகும். இதை மனம் என்ற சொல்லாலே நாம் பொதுவாகக் குறிக்கின்றோம்.

மனம் (mind) என்பதின் திறன்கள் பல. (thinking, feeling, memory, observation, creation, judgement, imagination, conception, perception, sensation, ratiocination, construction, ideation, opinion, etc.) சிந்தனை, உணர்வு, ஞாபகம், கவனம், படிப்பு, தீர்ப்பு, கற்பனை, கருத்து, கருத்துணர்வு, பகுத்தறிவு, அமைப்பு, எண்ணமிகுதல், அபிப்பிராயம் போன்ற பல்வேறு திறன்கள் மனம் என நாம் கூறுவதற்குண்டு. இத்தனையும் சேர்ந்து நமக்கு புரிந்துகொள்ளும் திறனை comprehension அளிக்கின்றன. புரிந்துகொள்வதற்குச் சிந்தனை நேரடியாகப் பயன்படும். சிந்தனையின்றியும் புரிந்துகொள்ள மனிதனால் முடியும். இதை நேரடி ஞானம் intuition என்கிறோம்.



புதிதாக ஒருவரைச் சந்தித்துப் பழகினால், இவர் நேர்மையானவர் என்று கொஞ்ச நாள் கழித்து அனுபவத்தில் புரிந்துகொள்கிறோம். அவரை நம்புகிறோம். வேறொருவர் வந்தால் நாம் இவரை அறிமுகப்படுத்தி இவர் நேர்மையானவர் எனச் சொல்ல நினைக்கும்பொழுது, வந்தவர் உடனே அவரை நேர்மையானவர் எனப் புரிந்துகொள்கிறார். நாம் பல மாதம் பழகி நேர்மையைப் புரிந்துகொண்டால், வந்தவர் பார்த்தவுடனே புரிந்துகொள்கிறார். எப்படி இவர் நேர்மையானவர் என உங்களுக்குத் தெரியும் எனக் கேட்டால் பார்த்தாலே தெரிகிறதல்லவா என்பார்.

அனுபவசாலிகள் பல பேரைப் பார்த்து நேர்மை எது, எது நேர்மையில்லை என்று பாகுபாடு செய்திருப்பார்கள். நெடுநாளைய அனுபவம் இன்று பார்த்தவுடனே புரிந்துகொள்ள உதவுகிறது. தகப்பனாருடைய அனுபவம் அதுபோல் பிள்ளைக்கு வருவதுண்டு. போன ஜென்மத்தில் ஆன்மா பெற்ற அனுபவமும் அதுபோல் நேரடியாகப் பொருள்களையும், மனிதர்களையும் புரிந்துகொள்ள உதவும். மனத்தை மௌனமாக்கினாலும் நேரடியாகப் புரிந்துகொள்ள முடியும்.

***சிந்தனை மூலம் புரிந்துகொள்வதைவிடச் சிந்தனையில்லாமல் புரிந்துகொள்ள மௌனம் உதவும்.***

அனுபவத்தாலோ, பரம்பரையாலோ, பிறப்பாலோ, மௌனத்தாலோ ஒருவரால் சிந்தனையின்றி நேரடியாகப்

புரிந்துகொள்ளமுடியுமானால், அவருக்கு நினைத்தது நடக்கும். அவர் மனம் நினைப்பதை அவர் உடலும், உலகமும் பூர்த்தி செய்யும். அவருடைய திறமை வளரும், உயரும். சிந்தனையே உயர்ந்த கருவி என்று முடிவாக நம்பும் இவ்வுலகத்தில் சிந்தனையைக் கடந்த நிலையுண்டு. அதற்கு உயர்ந்த திறனுண்டு என்று ஆன்மீகம் அறிவிக்கிறது.

✯ ✯ ✯

**738) சகுனம் போன்ற பல்வேறு அறிகுறிகள் ஒரு திட்டத்தில் எழும். அவை வெற்றிக்கு அளவுகோல், அறிகுறிகள் வெற்றியாகப் பூர்த்தியானால், திட்டம் வெற்றியாகும். இது சட்டம், விலக்குண்டு.**

***வெற்றியின் அறிகுறிகள்.***

சாவித்ரியைப் பிரித்துப் பார்க்கும் பழக்கம் நம்மவர்க்குண்டு. அது சொல்பவை அசரீரி போலிருக்கும். ஓர் அன்பர் அடிக்கடி அதைச் செய்தவர் தினசரி இதையே செய்வதும், அதன் அற்புதமான சொற்களை அனுபவிப்பதும், பலமுறை ஒரு நாளில் செய்வதுமாக இருந்தார்.

அன்னை பற்றிய வேறு சில புத்தகங்கள் ஒரு செட் வந்தபொழுது சாவித்ரியுடன் அவற்றையும் பார்க்க ஆரம்பித்தார். அவற்றுள் சில புத்தகங்களின் ஆசிரியரை அன்பர் அறிவார். ஆசிரியரிடம் பேசும்பொழுது தம் கேள்விகட்கு ஆசிரியர் சொன்ன பல பதில்கள் நினைவிலிருந்தன. அவர் எழுதிய புத்தகங்களைப் பிரித்துப் பார்த்தால் அவர் நேரடியாகச் சொன்ன பதில்கள் வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அன்பருக்கு அது ஆச்சரியமாக இருந்ததே தவிர அது புரியவில்லை.

நாம் ஊன்றி மனதை ஒரு புத்தகத்திலிருத்திப் பிரித்துப் பார்த்தால், புத்தகம் ஆசிரியரின் எழுத்து உருவம் என்பதால் அவர் பேசும் அதே சொற்களைச் சொல்லவல்லது என்பதே இச்சட்டம்.



“சரி, இனி இந்த வேலையை - பிரித்துப் பார்ப்பதைக் - கைவிடுவோம்” என்று முடிவு செய்துவிட்டார். வாரப்பத்திரிகை ஒன்றைப் படிக்க எடுத்தார். சாதாரணக் கதைப் புத்தகம் போன்ற பத்திரிகை அது. முதல் சொல் கண்ணில் பட்டது, ‘‘மனம் சந்தோஷமானால், வாழ்வு நிறைந்திருக்கும்”. ஒரு வாரம், பத்து நாட்களாக அன்பர் அன்னையின் 18 வால்யூம்களில் படித்தது “சந்தோஷம்” என்ற தலைப்பு.

இதுபோன்ற விஷயங்களையும் காதில் போட்டுக்கொள்ளாமல் வேலையைக் கவனிப்போம் என அன்பர் முடிவு செய்தபின், எந்தப் புத்தகமும் அன்றிலிருந்து சாவித்ரிபோல் பேசுவதைக் கண்டார்.

மனம் அன்னையால் நிறைந்திருந்தால் கண்ணில்படும் எழுத்துகளெல்லாம் சாவித்ரியாகும் என்பது அன்னைக்குண்மை.

ஒரு பெரிய திட்டத்தை ஆரம்பித்தவர் தம் கண்ணில், காதில் படுவனவெல்லாம் சகுனங்கள் போலிருப்பதைக் காண்பார். அவை கூறும் செய்திகள் முக்கியமானவை. அவை எதிர்காலத்தைக் காட்டும், கடந்ததை உணர்த்தும், நிகழ்காலத்தை கண்ணாடிபோல் பிரதிபலிக்கும்.

✯ ✯ ✯

**739) விலக்கான இடங்களில் அறிகுறிகள் தோற்பது திட்டத்தின் வெற்றியைக் குறிக்கும்.**

***வெற்றி தரும் கெட்ட சகுனம்.***

பொதுவான அறிகுறிகள் பொதுவான போக்கை உணர்த்தும். விலக்கான இடங்கள் உயர்ந்த நல்ல அறிகுறிகளைக் காட்டும், எதிரானதையும் காட்டும். இவைகளை நாம் சரிவர அறிய முயலவேண்டும். அதற்கு வேண்டியது சட்டமன்று, பக்குவமான மனப்பான்மை. இவற்றுள் சில,

- சிறிய நல்ல அறிகுறி பெரிய நல்லதைக் காட்டும்.
- தவறான இடத்தில் தவறான அறிகுறி நல்லதற்கடையாளம்.
- பெரிய இடத்தில் பெரிய நல்ல அறிகுறி நமக்குச் சிறிய நல்லது வருவதைக் குறிக்கும்.
- இடம் நல்லதாகவோ, கெட்டதாகவோ இருக்கலாம். அறிகுறி நல்லதாகவோ, கெட்டதாகவோ இருக்கலாம். முடிவை நம் மனநிலை பக்குவமாக அறியவேண்டும்.

தொழிலதிபர் புதிய சரக்கை மார்க்கட்டில் அறிமுகப்படுத்தும்பொழுது மார்க்கட் விரும்பினால் பெரிய இலாபம், இல்லாவிட்டால் பெரிய நஷ்டம் என்ற நிலை. எதிர் வீட்டுக்காரர் வந்து தம் பையன் வகுப்பில் முதல் மார்க்கும் பரிசும் பெற்றதைச் சொல்லி சந்தோஷப்பட்டார். இந்தப் பையன் பாஸ் செய்யமுடியாதவன், முதல் மார்க் வாங்கியுள்ளான் என்பதை, "என் சரக்கு மார்க்கெட்டில் முதல் மார்க் வாங்கும்" என எடுத்துக்கொண்டார். மார்க்கட்டில் சரக்கு பரிசும் பெற்றது. இது நேரடியான அறிகுறி. தெளிவானது. அதே சமயம் அவர் குமாஸ்தா வந்தான், "நான் கேட்ட எந்த இடத்திலும் கடன் கிடைக்கவில்லை, அதனால் நீங்கள் அவசியம் உதவ வேண்டும்" என்றான். இவன் சூதாடி, மகளுக்கு ஆப்பரேஷன் எனப் பலரிடமும் கடன் கேட்டிருக்கிறான். கிடைக்கவில்லை. சூதாடிக்கு "இல்லை" என்பது நல்ல சகுனம். இந்தியாவுக்கு உலக வங்கி $ 1 பில்லியன் கடன் கொடுத்தது என்ற செய்தி கண்ணில்பட்டால், நமக்கு நம் அளவில் நம் காரியம் பலிக்கும் எனப் பொருள்.

உள்ளூர் காலேஜில் நம் பையன் முதல் மார்க் வாங்கியிருந்தும் இடம் கிடைக்கவில்லை என்றபொழுது, அந்த ஆபீஸ் குமாஸ்தா நம் குடும்பத்திற்கு எதிரி. அதனால் அதுபோல் நடந்திருக்கிறது எனில் சரக்கை மார்க்கெட்டில் அறிமுகப்படுத்தும் நேரம் "முதல் மார்க்கும் இடம் பெற்றுத் தராததுபோல் நல்ல சரக்குக்கும் வரவேற்பிருக்காது" என நினைக்கத் தோன்றும். மனம் நிதானமாக (without reaction) இருந்தால் அடுத்த தபாலில் பெரிய காலேஜில் இடம் கொடுத்து தபால் வருகிறது. மனம் சஞ்சலப்பட்டிருந்தால் இந்த நல்லது நடந்திருக்காது. சரக்கு பிறகு பார்த்தபொழுது அதேபோல் வெற்றி பெற்றது.

☆ ☆ ☆

**740) சட்டத்திற்கும் விலக்கிற்கும் இவை புறம்பானவை. அன்னை செயல்படும் இடங்கள் பொதுவாக அப்படிப்பட்டவை. இத்திட்டங்கள், அறிகுறிகள் வென்றாலும், தோற்றாலும் வெற்றி பெறும். மேலும் ஒரு நிலையுண்டு. திட்டமே தோற்றாலும் "வெற்றி" நிச்சயமாக உண்டு.**

*தோற்றாலும், வென்றாலும் வெற்றி.*

தண்ணீர் சூடானால் ஆவி வரும். ஆவி எழுந்தால் தண்ணீர் சூடாகிவிட்டது என்று பொருள். இது (ஸ்தூல உலகில் material life) நிஜ உலகில் நடப்பதால் நமக்கு வியப்பாக இல்லை. நாம் ஒரு காரியத்திற்குப் போகிறோம். ஒரு வீடு வாங்கப் போகிறோம். பேரம் படியுமா எனத் தெரியவில்லை. காலையில் 8 மணிக்கு நாம் வீட்டிலிருந்து புறப்படுகிறோம். விற்பவர்கள் காலை ஆறு மணிக்கே நாம் கேட்ட விலைக்குக் கொடுக்க முடிவு செய்துவிட்டார்கள் என்றால், அவர்கள் மனதில் ஏற்பட்ட நல்ல முடிவு, சூட்சும உலகில் நம் மனதை எட்டித் தொடும். இரவெல்லாம் நாம் பதைபதைப்பாக இருந்தால் 6 மணிக்கு அவர்கள் முடிவெடுத்த நேரம், அம்முடிவு சூட்சுமமாக நம் மனதை எட்டியவுடன் நம் மனம் அமைதியடையும். நாம் சூட்சுமமானவர்களானால் அதை அறிவோம். இல்லையேல் இல்லை. வீடு வாங்குவது நமக்கு வாழ்வில் ஒரு தரம். முக்கியமான செயல். பெரிய காரியம். வீடு வாங்க பணம் பெட்டியிலிருக்கிறது. நெல் விற்று வந்த பணம் அது. அந்த வீட்டை ஆளப்போவது

மனைவி, சொத்தாகப் பெறப்போவது மகன். வீட்டை வாங்கியபின் நம் அந்தஸ்து உயரும். இன்று சகஜமாகப் பேசும் அண்ணன், அண்ணி, மாமன் மகன் வீடு வாங்கியபின் நமக்கு மரியாதை தருவார்கள். வயதில் பெரியவர்களுக்கு மரியாதை வந்தால் இளைஞர்களிடம் மரியாதை உணர்வைப் பிரியமாகக் காட்டுவார்கள். சிக்கனமான அத்தை எப்பொழுதும் வீட்டிற்கு வெறும் கையாக வருபவர்கள் வீடு வாங்கியபின் இரண்டு பழம் கொண்டு வருவார்கள். தெருவில் நடந்துபோகும்பொழுது தெரிந்தவர்களைக் கடந்துசென்றால் அவர்கள் இன்று நம்மைக் கவனிக்காமல் செல்பவர்கள், வீடு வாங்கியபின் பார்த்து சிரித்து வணக்கம் சொல்வார்கள். அவர்கள் அத்தனைப் பேருக்கும், வீட்டிலுள்ள அத்தனைப் பொருள்களுக்கும், நடக்கும் நிகழ்ச்சிகள் அத்தனைக்கும் விற்பவர்கள் காலை 6 மணிக்கு முடிவு எடுத்தவுடன் விஷயம் தெரிந்துவிடும். நெல்லை உற்பத்தி செய்து வீடு வாங்கப் பணம் கொடுத்த நிலத்திலுள்ள பாளை வெடிக்காத தென்னை மரம் பாளை வெடித்த செய்தி நாம் புறப்பட ஒரு மணி நேரத்திற்கு முன் வரும். சிரித்தே அறியாத மனைவியின் முகத்தில் புன்னகை எழும். தினமும் 7 மணிவரை தூங்கும் மகன் அன்று காலையில் எழுந்து சுறுசுறுப்பாக இருப்பான். அண்ணி தற்செயலாய் வந்து சற்று நேரம் பிரியமாக என்றுமில்லாமல் பேசுவார்கள். அத்தை வீட்டிலிருந்து பக்ஷணம் வரப்போவதாகச் செய்தி வரும். தெருவில் இறங்கியவுடன் எதிர்வீட்டுப் பங்காளி சந்தோஷமாக விசாரிப்பது புதியதாகத் தோன்றும். ஆபீசில் உடன் வேலை செய்பவர் வருஷக்கணக்காகப் பேசியறியாதவர் வழியில் பார்த்து சிரித்துப் பேசி, ‘‘எங்கோ முக்கியமாகப் போகிறீர்கள் போலிருக்கிறது. லீவு லெட்டர் தருவதானால் நான் எடுத்துப் போகிறேன்’’ என்று கூறுவது வினோதமாக இருக்கும். அவரைத் தாண்டிப் போனால் சுமங்கலி நிறைகுடம் நீர் எடுத்துவருவாள். இதுவரை எதையும் கவனிக்காவிட்டாலும், சுமங்கலியையும் நிறைகுடத்தையும் பார்த்தவுடன் நல்ல சகுனம், பேரம் முடியும் என்று நினைக்கிறோம்.



எல்லாப் பொருள்களும், எல்லா நிகழ்ச்சிகளும் சூட்சும உலகத்தில் உயிரோடு இருந்து சகுனமாகின்றன என்றாலும், நமக்குச் சுமங்கலியும் நிறைகுடமும் நல்ல சகுனங்களாகத் தெரிகின்றன. ஏனெனில் அவற்றை மட்டும் நாம் கற்றுக்கொண்டிருக்கிறோம். அனைத்தையும் நாம் தெரிந்துகொள்ளவில்லை.

வீடு பேரம் முடிவதை இவை சகுனமாகக் காட்டுவதுபோல், அந்த வீட்டிற்குப் போனபின் பிரமோஷன் வரப்போவதையும், வீட்டை வாங்கியபின் அதன்மூலம் கேஸ் வரப்போவதென்றால் அதையும் சகுனங்கள் காட்டும். நாம் அவற்றைக் கூர்ந்து பயின்றிருந்தால் தெரியும்.

- *நல்லது தொடர்ந்து நல்லதாக இருப்பது,*
- *நல்லது மூலம் அதிர்ஷ்டம் வருவது,*
- *நல்லதில் கெட்டது கலந்திருப்பது,*
- *நல்லதாக ஆரம்பித்து கெட்டதாக முடிவது,*
- *நல்லதாக ஆரம்பித்து கெட்டதாக மாறி முயற்சியால் அதிர்ஷ்டமாவது,*
- *சிறியது, பெரியது, சௌகரியமானது, சந்தோஷம் தரக்கூடியது,*

*ஆகிய அனைத்தும் ஆரம்பத்திலும், பின்னர் நடைமுறையிலும் தொடர்ந்து தவறாது நிகழ்ச்சிகள் மூலம் நமக்குச் செய்தி அளிப்பது சகுனம் எனப்படும்.*

நாலு வாலிபர்கள் சேர்ந்து அவர்களுடன் வேலை செய்யும் பெண்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபொழுது ஒரு பெண்ணைப் பற்றி அனைவரும் அபிப்பிராயம் சொன்னார்கள். ஒருவருக்கு மட்டும் அவள் யார் என்று தெரியவில்லை. மறுநாள் அவளைக் கவனித்து அபிப்பிராயம் சொல்லும்படிக் கேட்டார்கள். மறுநாள் அவளை அவர் கவனித்தார், ‘‘விதவையின் தோற்றம்’’ உள்ளவள் என்றார். மற்றவர்கட்கு வியப்பாக இருந்தது. பிறகு அவரே அவளைத்

திருமணம் செய்யும்படி அமைந்தது. அவளால் அவர் உயிருக்கு ஆபத்து என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்தபொழுது தாம் பல ஆண்டுகட்குச் சொன்ன சொல் அவருக்கு நினைவு வந்தது. ஆயுள் கெட்டியாக இருந்ததால், மரணம் வரவில்லை, பொய்யான மரணச் செய்தி வந்து போயிற்று, வருமானம் போயிற்று, உயிரின் இலட்சணமான உணர்வு அழிந்தது. அவர் நினைவு உண்மை, வாழ்வு நிதர்சனப்படுத்தியது.

வயது வந்த பெண் சற்று நிதானமற்றவள் வழிதவறிப் போய் காணவில்லை. அவளைப் பல இடங்களிலும் தேடினார்கள். இரவில் 11 மணிக்கு தெருத்தெருவாகத் தேடி அலைந்து ஓரிடமாகப் பாதையோரம் உட்கார்ந்தபொழுது தெரிந்தவர் ஒருவர் வந்து விசாரித்து "என்னிடம் 50,000 ரூபாய் உள்ளது. கடனாக நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்களா?" என்று கேட்டது வாழ்வில் நாம் அறியாத ஒன்று. சில ஆண்டுகட்குப்பின் அவர் பணத்தைத் திருப்பிக் கேட்க நினைத்து வாங்கியவரைச் சந்திக்க வந்தவர், அவர் போயிருந்த இடத்தின் எதிரில் வந்து காத்திருந்து பணம் வேண்டும் என நடுரோட்டில் கேட்கும்பொழுது மணி இரவு 11! அன்றைய ஆரம்பம், இன்றைய நிகழ்ச்சிக்குரிய சகுனம்.

சீனுவாச ராமானுஜம் பரீட்சையில் பெயிலானார். பிற்காலத்தில் உலகப் பிரசித்தி பெற்றார். பெயிலானது எதைக் குறிக்கிறது. அம்சம் பெரியதாகவும் அந்தஸ்து சிறியதாகவுமிருந்தால் உள்ள நிலையில் மற்றவர்கள் சாதிப்பதையும் சமயத்தில் சாதிக்க முடிவதில்லை. கணிதத்தில் மனம் முழுவதும் லயித்ததால் அவரால் ஆங்கிலத்தில் மனத்தைச் செலுத்த முடியவில்லை. அதனால் அவர் விலக்காக (exception) அமைந்தார்.

திருமண ஏற்பாட்டுக்குச் சொந்த ஊரைவிட்டு அவசரமாகப் புறப்பட்டவர், தாம் போகவேண்டிய ஊருக்குள்ள பஸ்ஸை ஒரு திருமணத்திற்காக ஏற்பாடு செய்துவிட்டதை அறிந்து, தடையாக



இருப்பதை உணர்ந்து, பஸ் புரோக்கருடன் சண்டை போட்டார். மேலும் அவர் அறிந்தது பஸ் அங்கிருந்து காலியாகப் புறப்பட்டு, ஒரு கிராமத்திற்குப் போய் நிரம்பிப் போகும் என்றும் அறிந்தார். தாம் போகும் வேலை தம் திருமணம், அது தகறாரான நிலையில் உள்ளது. கடைசி பஸ்ஸில் டிக்கட் இல்லை. அதில் போகும் அத்தனை பேரும் திருமணத்திற்குப் போகிறார்கள். அதுவும் காலியாகப் புறப்படுகிறது. அது நிறையும் இடம் தம் சொந்த கிராமம்! அத்தனையும் நினைவிலிருந்தது, எதுவும் புரியவில்லை. திருமணம் ஆயிற்று, அத்தனையும் புரிந்தது. திருமணத்தை உறவினர் அத்தனை பேரும் எதிர்த்தனர். காலியான பஸ்ஸில் இடம் இல்லை என புரோக்கர் சொல்கிறான். "காலி"யான சம்பந்தம், முழு கிராக்கி செய்தார்கள். சொந்த ஊர்வரைதான் போகலாம் என்ற நிலை திருமணம் முடிந்தபின் சொந்தத்தில்தான் உறவுள்ளது. அதைத் தாண்டிய உறவு காலி என்பது விளங்கிற்று. அன்று புரோக்கருடன் அவர் போட்ட சண்டை திருமணத்திற்கு முன்னால் ஆரம்பித்து வாழ்நாள் முழுவதும் அவர் போட்ட "சண்டை"களை குறித்தது!

பெரிய திட்டத்தின் பொறுப்பேற்க அழைத்தபொழுது நேரம் இராகு காலம், ஏற்றார். திட்டத்தையும், பொறுப்பையும் கொடுத்தார்கள். பாங்கில் பணம் வாங்கும் உரிமை power of attorneyயைக் கொடுக்கவில்லை. இராகு காலம் பவர் ஆப் அட்டர்னியை விழுங்கியது. பவரைப் பெற்றவர் "நான் பேங்கில் கையெழுத்துப் போட்டுப் பணம் வாங்கமாட்டேன். உனக்கு எல்லாச் சுதந்திரங்களும் தருகிறேன்" என்றார். பணமில்லாத சுதந்திரத்தை என்ன செய்வது? இராகு காலம் தன் கடுமையைக் காட்டுகிறது. நடந்ததை அன்னையிடம் சமர்ப்பணம் செய்தார். 4 மாதமாயிற்று. பாங்க் தானே முன்வந்து பணம் தருகிறது. பவர் இல்லாமல் எப்படி வாங்குவது! "நீங்கள் பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள். நாங்கள் பவருக்குரிய கையெழுத்தைப் பெறுகிறோம்" என்றது பேங்க். பாங்கில் கையெழுத்துப் போட்டு பணம் வாங்கமாட்டேன் என்றவர், எந்தக்

கையெழுத்தும் இல்லாமல் சொந்தப் பணத்தை பாங்க் கொடுத்ததைப் போல் 4 மடங்கு கொடுத்தார். இராகு காலம் கெட்ட சகுனம். பவரை விழுங்கியது. திட்டத்தில் அன்னையிருப்பதால் எவரும் முறை தவறிப் பேசக்கூடாது. பேசினால் மாறாக, நேர் எதிர்மாறான பலன் வரும் என்பது அன்னை சட்டம். அதனால் அவர் தாமே பணம் தர வேண்டியதாகப் போயிற்று.

பாஸ் செய்ய முடியாதவனுக்கு முதல் மார்க் வாங்கிக் கொடுத்ததற்குப் பதிலாக அவன் செய்த சேவை கூலியைப் பெற்று பத்தில் ஒரு பாகம் வேலை செய்தான். அடுத்த 30 வருஷமாகப் பெற்ற பெரிய சொத்தில் கூலி பெற்றவர்கள் பத்தில் ஒரு பாகம் வேலை செய்தார்கள். சொத்து அந்தப் பையன் ஊரில் வாங்கும்படி அமைந்தது!

மனிதன் தோற்றத்தைப் பார்ப்பவன். அதுவும் இன்று கண்ணில் படுவதை மட்டும் கணக்குப் போடுபவன். சமூகம் அதன் கணக்குப் போடும். காலம் சமூகத்தைக் கடந்தது. இறைவன் காலத்திற்கும் அகப்படாதவன். “வெற்றி” நிச்சயம் உண்டு என நான் கூறுவது இறைவன் கணக்குப்படி “வெற்றி”.

***ஸ்ரீ அரவிந்தம் இறைவன் என்று கூறும்பொழுது மேல் உலகில் உள்ள இறைவனைக் கூறவில்லை, நம்முள் மறைந்துள்ள ஜீவாத்மாவையும் குறிப்பிடவில்லை. பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறும் இறைவன் நம்முள்ளிருந்து, நம் வாழ்வில் வெளிப்பட்டுச் செயல்படும் இறைவனைக் குறிப்பிடுகிறார். அவருக்கு வெற்றி தவிர வேறெதுவும் தெரியாது.***

- சகுனத்தின் சட்டங்கள் எளியவை.
- நல்ல சகுனம் நல்ல முடிவையும், கெட்ட சகுனம் கெட்ட முடிவையும் குறிக்கும்.
- விலக்கான நேரங்களில் சகுனம் விலக்காகச் செயல்படும்.
- இவையெல்லாம் வாழ்வில் உள்ள மனிதனுக்குரியவை.



- துறவிக்கு வாழ்வில்லை. ஆனால் சட்டம் இல்லாமலில்லை.
- துறவியின் சட்டத்தை நாம் ஆராயாவிட்டாலும், நாம் கூறும் சட்டமும் விலக்கும் துறவிக்குரியதுமில்லை.
- துறவிக்கில்லாத சட்டம் மேல் உலகிலுள்ள இறைவனுக்கும் இல்லை.
- நம் சட்டம் இறைவனுக்குரியது, ஆனால் வாழ்விலுள்ள இறைவனுக்குரியது.
- நாம் அதை இல்லறத்தின் துறவறம் என்கிறோம்.
- அங்கு இறைவன் என்பது சைத்தியப் புருஷனாகும்.

நான் அடிக்கடி கூறும் உதாரணத்தை மீண்டும் இங்குக் குறிப்பிடுகிறேன். அன்னைக்கு ஆசிரம வருஷச் செலவை சம்பாதித்துக் கொடுக்க ஏற்பட்ட திட்டம், அன்று அதைப்போல் 32 மடங்கு வருமானத்தைக் காட்டியது. நிலமும், பணமும், நீரும், டெக்னாலஜியும், ஊரும், உதவியும் ஆறாகப் பெருகியது. மனம் முனைப்பாகி 32 மடங்கை சுருக்கி 1இல் 1/10 மடங்காக்கியது. சேவை அழும்பாயிற்று, தலைமை தலைகிறுக்காயிற்று, உதவி உபத்திரவமாயிற்று, இந்தச் சுருக்கமான வருமானமும் சுடுகாடாயிற்று. ஆரம்பித்த அன்பரின் சமர்ப்பணம் மட்டும் வளர்ந்தது. அத்தனையையும் கடந்து 12 மாதம் கழித்து வருமானமாக வரவேண்டிய 1/10 பாகம் காணிக்கையாக வந்தது. வேறுவகையில் அன்னைக்கு 3/10 பாகம் “காணிக்கை”யாக வந்தது. இது “வெற்றி”.

☆ ☆ ☆

*தொடரும்....*

**ஜீவிய மணி**

முழுமையை நாடினால் சுமுகம் எழும்.

## லைப் டிவைன்

கர்மயோகி

## XI. Delight of Existence : The problem

The Self-delight of Brahman is not limited. *Page No. 92*
Its self-being is still and motionless. *Para No. 3*
The stillness does not limit the self-delight.
The force of consciousness throws itself into forms.
It can do so in infinite forms.
Those forms endlessly vary.
They revel in the flux.
The self-delight too behaves like that force.
The flux is the mutability of itself.
Numberless teeming universes represent them.
This is the creative play of Force.
It looses itself forth and enjoys.
It is a variation of self-delight.
This is the object of this infinite movement.

We can put it in other words. *Page No. 92*
Sachchidananda is *Para No. 4*
Existence-Consciousness-Bliss.
It is triune.
Its consciousness is creative in nature.
Or, it is a self-expressive Force.



## 11. ஆனந்தம் - கேள்வி

பிரம்மத்தின் ஆனந்தத்திற்கு அளவில்லை.
அதன் ஜீவன் அமைதியாக அசையாமலிருக்கும்.
அதன் அமைதி அதன் ஆனந்தத்திற்கு இடையூறு செய்யாது.
ஜீவிய சக்தி ரூபமாக வெளிவருகிறது.
அதுபோல் அளவில்லாத ரூபங்களெழும்.
அந்த ரூபங்கள் முடிவில்லாமல் மாறும்.
ரூபங்கள் ரூபப்பிரவாகத்துள் திளைக்கும்.
அதன் ஆனந்தமும் சக்திபோல் செயல்படும்.
சக்தியின் பிரவாகம் சக்தி அசைந்து மாறுவதால் எழுவது.
எண்ணற்ற பிரபஞ்சங்கள் சக்தியைப் பிரதிபலிக்கின்றன.
இது சக்தியின் சிருஷ்டியான லீலை.
சிருஷ்டித்து ஆனந்தப்படுகிறது.
தன் ஆனந்தத்தின் மாறிய ரூபம் அது.
அனந்தமான இச்சலனம் அதன் இலட்சியம்.

இதை வேறு வகையாகக் கூறலாம்.
சத்-சித்-ஆனந்தம்
என்ற சச்சிதானந்தம் எனலாம்.
மூன்றும் ஒன்றில் அடங்கியது.
அதன் ஜீவியம் பிரகிருதியில் சிருஷ்டிக்கவல்லது.
அல்லது, அது தன்னை வெளிப்படுத்தும் சக்தி எனலாம்.

**It is capable of infinite variation.**
**It varies in form and phenomenon.**
**Its self-conscious being enjoys the variation.**
**Its enjoyment is endless.**
**Something follows.**
**Anything is Sachchidananda.**
**Anything that exists is a form of Sachchidananda.**
**Things are terms of this existence.**
**They are terms of that conscious force.**
**They are terms of that delight of being.**
**There is one immutable being.**
**All things are its mutable forms.**
**There is one infinite force.**
**Everything is a finite result of that infinite force.**
**There is one self-existence.**
**It is all-embracing.**
**Its delight is all-embracing.**
**The self-existence is invariable.**
**All things are variable self-expressions of that.**
**The conscious force dwells in everything.**
**A thing is what it is by that force.**
**So also, in everything there is delight.**
**It is delight of existence.**
**A thing exists by that delight.**
**A thing is because of that delight.**

**Contd....**

☆ ☆ ☆



முடிவில்லாமல் மாறும் குணமுடையது.
ரூபத்தாலும், நிகழ்ச்சியாலும் மாறக்கூடியது அது.
அதன் சுய-ஜீவன் புதியன படைப்பதில் திளைக்கிறது.
அதன் அனுபவத்திற்கு அளவில்லை.
இதற்கு ஒரு பொருளுண்டு.
எதுவும் சச்சிதானந்தமாகும்.
இருப்பவை அனைத்தும் சச்சிதானந்த ரூபமே.
சத்தின் பல்வேறு சிறு ரூபங்கள் இவை.
சித்-சக்தியின் கண்டங்களாகும் இவை.
ஆனந்தத்தின் அனந்த ரூபங்களாகும் இவை.
அழியாத ஜீவன் ஒன்றுளது.
இருப்பவை எல்லாம் அதன் அழியும் ரூபங்களாகும்.
அனந்தமான சக்தி ஒன்று.
அனந்தமான ஒரு சக்தி கண்டமான பல சக்திகளாகின்றது.
சத் என்பது ஒன்று.
அனைத்தையும் அது தழுவும்.
அதன் ஆனந்தமும் அனைத்தையும் தழுவும்.
சத் மாறாதது.
உள்ளவை அனைத்தும் மாறாத ஒன்றின் மாறும் ரூபங்கள்.
எல்லாவற்றுள்ளும் சித்-சக்தி உறைகிறது.
ஒரு பொருள் அப்பொருளாகி இருப்பது இந்தச் சக்தியால்தான்.
அதேபோல், ஆனந்தம் எல்லாவற்றுள்ளும் உறைகிறது.
அது சத்துடைய ஆனந்தம்.
எதுவும் இந்த ஆனந்தத்தால் வாழ்கிறது.
இந்த ஆனந்தமிருப்பதால் பொருள்கள் இருக்கின்றன.

*தொடரும்......*

☆ ☆ ☆

# இம்மாதச் செய்தி

**எதிரி உள் மனதால் கொடுத்ததே நமது வெற்றி.**

**Affectionate persons never give up their rivals consciously. All serve their rivals sub-consciously.**

**எதிரியின் வேகம் நம் மீதிருந்தால் அவ்வேகத்தின்மூலம் அவனுடைய திறன் நம்மை வந்து அடைந்து நமக்கு வெற்றி தரும்.**



**“Agenda”**

**Mother never had a headache.**
**It came to Her to show itself.**
**Mother's hands, eyes, etc., are conscious.**
**Wanting to take two dozen papers, Her hands exactly picked up 24 sheets.**

***அன்னைக்குத் தலைவலியே வந்ததில்லை.***

***தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள அன்னையிடம் தலைவலி வந்தது.***

***அன்னையின் கைகள், கண்கள், ஆன்ம விழிப்போடிருக்கின்றன.***

***இரண்டு டஜன் பேப்பர் எடுக்க விரும்பினால் அன்னையின் கைகள் 24 பேப்பரை எடுக்கும்.***

ஜப்பானில் அன்னை இருக்கும்பொழுது ஒரு விஷ ஜுரம் அவரைத் தாக்கியது. அத்துடன் ஜப்பானை விட்டு அந்த ஜுரம் போய்விட்டது. அன்னையின் உடலை ஒரு விஷயம் – vibration – தீண்டினால், அது தவறானதானால் வலுவிழக்கும். உதாரணமாக ஒருவர் அன்னை மீது கோபப்பட்டால், உலகில் கோபம் வலுவிழக்கும். தம்மீது கோபப்படாதவரே ஆசிரமத்தில் இல்லை என்கிறார் அன்னை.

கண்ணும், கையும் ஆன்ம விழிப்புடனிருக்கும் என்றால் என்ன? ஒரு பொருள் வேண்டுமானால் நாம் அதைத் தேடுகிறோம். 2 வருஷத்திற்குமுன் ஒரு பேப்பரை ஒரு புத்தகத்தில் வைத்து அலமாரியில் அன்னை வைத்திருந்தால், இப்பொழுது அது எங்கிருக்கிறது என்று நினைவு வாராவிட்டால், அவர் கண் அப்புத்தகத்தின் மீது படும். கண்ணில் உள்ள ஆன்மா, அன்னை

படித்த பேப்பரை நினைவு வைத்திருப்பதால், பார்வை நேரடியாக அதன்மீது விழும்.

போன மாதம் படித்த விஷயம் இப்பொழுது மீண்டும் பார்க்கவேண்டுமானால், அன்னை அப்புத்தகத்தைத் திறந்தால் அதே பக்கம் வரும். அது கைகளில் உள்ள ஆன்மா விழிப்பாக இருப்பதாகப் பொருள்.

- ஒரு பொருளைக் கையில் எடுத்தால் அதன் எடையை நிறுக்காமல் கை அறிவது பயிற்சிக்குரியது என்று Life Divineஇல் பகவான் எழுதுகிறார்.
- தொலைந்த சிறு பொருளை இருளில் தேடும்பொழுது காலில் தட்டுப்படும் அனுபவம் அன்பர்கட்குண்டு.
- அன்பர்கள் அன்னை சம்பந்தமாக வேலை செய்யும்பொழுது நினைவு, கண், கை, கால், உடல், அதுபோல் செயல்படுவதைக் காணலாம்.
- கலைஞர்கள் கை தாம் கண்ட காட்சிகளை நினைவிலிருந்து எழுதும்.
- சாவித்ரியைத் திறந்தால் நம் மனத்தில் உள்ள கேள்விகட்கு அதுபோல் பதில் சொல்வதை நாம் அனைவரும் அறிவோம்.

☆ ☆ ☆

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உலகத்தை அற்புதமாகக் காண, பரிணாமத்தை விட உயர்ந்த நிலையிலிருக்க வேண்டும்.

*நிலையைக் கடந்தால் நிகழ்ச்சி மலரும்.*
*அதுவே அற்புதம்.*



## அன்பரும் - நண்பரும்

### சத்தியத்தின் சங்க நாதம்

அன்பர் - ‘‘அன்னை’’ என்ற நூலில் ‘‘மடையனை அவன் மடமைக்கேற்றபடி அன்னை வழி நடத்துகிறார்’’ என்றொரு வாக்கியம் வருகிறது. புரியவில்லை.

நண்பர் - “விவேகிக்கு அன்னை பெரும் விவேகம் அளிக்கிறார்” என்பது முன் வாக்கியம். இரண்டிற்கும் ஒரே பொருளாயிற்றே. அது புரிகிறதா?

அன்பர் - அது புரிகிறது. புத்தியிருந்தால் அன்னை அதிக புத்திசாலித்தனம் தருகிறார். அது சுலபம். அடுத்தது மடமையாயிற்றே.

நண்பர் - உங்கள் கம்பனி மேனேஜர் வேறு வேலைக்குப் போவதாகக் கூறினீர்களே அப்பிரச்சினையில் இக்கருத்து விளங்கும்.

அன்பர் - அந்தப் பிரச்சினை தீர்ந்தால் போதும், வேறெதுவும் புரியத் தேவையில்லை. மானேஜர் போனால் எனக்குக் கையொடிந்தது போலாகும், எழுந்திருக்கவே முடியாது. நானும் எவ்வளவோ பிரார்த்தனை செய்தேன், பலிக்கவில்லை.

நண்பர் - பிரார்த்தனை தீவிரமாகும்பொழுது பிரச்சினை சிக்கலாகுமே.

அன்பர் - அப்படித்தானிருக்கிறது. அதுவும் விளங்கவில்லை. பயம்தான் முன் நிற்கிறது.

நண்பர் - நாமே பிரச்சினையை வளர்க்கிறோம். எப்பொழுதும் மானேஜர் போய்விடுவார் என்ற எண்ணம் மூலம் நாம் பிரச்சினைக்கு உயிரளிக்கிறோம், அது வளர்கிறது.

அன்பர் - நம் நினைப்பு பிரச்சினையை வளர்க்கிறதா? அதை எப்படி மறப்பது? அதுதானே பிசாசுபோல் என்னைப் பிடித்துக்கொண்டுள்ளது?

நண்பர் - இது மிகச் சிரமமான காரியம். ஆனால் நாம் பிரச்சினையை மறக்காதவரை பிரச்சினை தீராது. ஒருவழி மனம் அன்னையை நாடிப்போனால், ஏதோ ஒரு கட்டத்தில் பிரச்சினை சற்று மறப்பது தெரியும். அதை வலியுறுத்தி பிரச்சினையினின்று விலகினால், உடனே தீரும்.

அன்பர் - நாம் பேசும்பொழுது இதன் உண்மையை மனம் ஏற்கிறது. சற்று நிம்மதியாக இருக்கிறது. நாளை மறுநாள் பார்க்கலாம். இன்னும் 12 நாள் கெடுவு இருக்கிறது.

இந்த மானேஜர் திறமைசாலி. இவருக்கு ரூ.10,000 சம்பளம். நிறைய புதுக் கம்பனிகள் வருகின்றன. ரூ.12,000 சம்பளத்திற்கு வேலை வந்துள்ளது. எப்படி மானேஜர் தொடர்ந்து பழைய வேலையிலிருப்பார்? அவர் போனபின் அவர் போன்ற நாணயஸ்தர் கிடைப்பது சிரமம். இவையெல்லாம் அன்பர் மனத்தை உலுக்குகிறது. இந்த நேரத்தில் நம்பிக்கை போய்விடும். அதே சம்பளம் அன்பர் கொடுக்கமுடியாது. இவையெல்லாம் ஒருபுறமிருக்க பிரச்சினையின் கரு பிரச்சினையிலில்லை. அன்பர் கவலைப்படுவதில் உள்ளது. அவர் மனம் பிரச்சினையை விட்டு விலகினால், மானேஜர் மனம் மாறுவார். அது எவ்வகையாக வரும் என்று கூறமுடியாது. வீட்டுச் சந்தர்ப்பம், மார்க்கட் நிலவரம், மானேஜர் மனம் எனப் பல அம்சங்கள் எப்படி மாறும் என்று கூறமுடியாது. மாறும் என்று மட்டும் நிச்சயமாகக்



கூறலாம். மானேஜரே போய்விட்டாலும், அன்பருக்குச் சிரமம் வாராது. புதிய மானேஜர் அதிகத் திறமைசாலியாக அமைவார். அடுத்த நாட்களில் அன்பர் பெருமுயற்சி செய்தார். தியானத்தில் பிரச்சினையை மறந்தார். அடியோடு மறந்துவிட்டார். தியானம் முடிந்து வெளியே வந்ததும் மானேஜர் வந்துவிட்டுப் போனதாகக் கூறினார்கள். செய்தியை அறிய மனம் பதைத்தது. நிதானமாக இருந்தார். மானேஜர் வந்தார். இரண்டு செய்திகள் அவர் மூலம் வந்தன. முதற் செய்தி அவருக்கு வீட்டு லோன் சாங்ஷன் ஆனதால் அவர் வெளியூரில் புது வேலையை ஏற்காமல் வீடு கட்டுவதில் இறங்கப்போவதாகச் சொன்னார். அடுத்தது கம்பனிக்குப் பெரிய ஆர்டர் வந்திருக்கிறது. இதை முடித்தால் மானேஜருக்கு கணிசமான incentive கமிஷன் உண்டு என்பதால் அவர் மனம் மாற வழியுண்டு. எல்லாம் முடிந்தபின் அன்பர் சந்தோஷமாக வந்தார்.

அன்பர் - ரொம்ப ஆச்சரியம். எல்லாம் நல்லபடியாக முடிந்துவிட்டது. பாரம் நீங்கியது. அன்னை சக்திவாய்ந்த தெய்வம்தான். நான் உங்களை விட்டுப் போனபொழுது ஓரளவு நிம்மதியாகப் போனேன். ஆனால் தியானம் செய்ய முடியவில்லை. தூங்கிவிட்டேன். காலையில் நிம்மதியிருந்தது. தியானம் கூட நேரமாயிற்று. படித்தேன், தியானம் வந்து என்னை ஆட்கொண்டது. எங்கும் அமைதி. இதேபோல் இரண்டொரு நாட்கள் கழிந்தன. மூன்றாம் நாள் நல்ல செய்தி வந்தது. உடனே உங்களிடம் கூறினேன்.

நண்பர் - அனைவருக்கும் இது நடக்கிறது. அப்பொழுது இதன் முக்கியத்துவம் நம் மனதில் படுவதில்லை. நம் அனுபவத்தில் காணும்பொழுது புரிவது போலிருப்பதில்லை. இங்கு ஒரு யோக தத்துவம் உண்டு. அதுவே முக்கியம். நாம் விலகினால் பிரச்சினைக்கு உயிரில்லை. பிரச்சினையை வளர்ப்பது நம் கவலை.

நாம் கவலைப்படுவதாக நினைக்கிறோம், ஆனால் நடப்பது என்ன? பிரச்சினைக்கு உயிர் கொடுப்பது; இதற்கடுத்த இரு கட்டங்களுண்டு. இரண்டும் யோகத்திற்குரியவை, வாழ்வுக்குப் பெரிதும் உதவும். பொதுவாக வாழ்வை எளிதாகக் கருதுபவர்க்கு அவையில்லை. வாழ்வில் பெரிய பொறுப்பை ஏற்பவர்க்கு அது முடியும், பலன் தரும்.

அன்பர் – அவற்றைக் கேட்டுக்கொள்ளப் பிரியப்படுகிறேன்.

நண்பர் – நான் அதை வாழ்வின் கோணத்தில் விவரிக்கின்றேன். முறையை யோகப் பாணியில் கூறுகிறேன். வாழ்வில் சிறியது பெரியது என்றுண்டு. எல்லோரும் எலெக்ஷனில் நிற்கும் உரிமை பெற்றவரானாலும், அதெல்லாம் நமக்கில்லை என விலகுபவர் அநேகர். பெருஞ் செல்வம், உள்ளூரில், மாவட்டத்தில் பெரும் பதவி, பொறுப்பு என்பவை முதல் நிலைக்குரியவை. அடுத்தது நாட்டில், உலகில் பெரிய பதவி, பொறுப்பு, செல்வம், செல்வாக்கு.

அன்பர் – இந்த மானேஜர் பிரச்சினை எனக்கு வாழ்வா, சாவா என்ற பிரச்சினை. பிறருக்குப் புரியுமோ, புரியாதோ, இதைத் தீர்த்தபின் இதேபோல் தீர்க்கமுடியாத பிரச்சினை எனக்கு வாழ்வில் இல்லை என நான் நினைக்கிறேன். அது சரியா?

நண்பர் – அது சரி. அதன் சக்தியுள்ள இடம் மனம் பிரச்சினையிலிருந்து விலகுவது. விலகிய மனம் அன்னையை நாடி அங்கு லயிப்பது. பிரச்சினை நம்மைப் பொறுத்தவரை வெளியிலிருந்து வருவது. அடுத்த இரண்டு கட்டங்களில் முதல் நிலை மேல் மனம். பிரச்சினையிலிருந்து விலகியதுபோல்



மேல்மனத்திலிருந்து (from its occupation) விலகினால் முதல் நிலை வாய்ப்பு வரும்.

அன்பர் – பிரச்சினை நம்மை ஆட்கொள்கிறது. விலகவேண்டும், விலக்கவேண்டும், என்றால் புரிகிறது. மேல் மனத்திலிருந்து விலகவேண்டும் என்றால் ஒன்றும் புரியவில்லை.

நண்பர் – நமக்குள்ள நம்பிக்கைகள் பெரியன, சிறியன என இருவகைப்படும். சிறிய நம்பிக்கைகளிலிருந்து விலகுவது முதல் நிலை. பெரிய நம்பிக்கைகளிலிருந்து விலகுவது இரண்டாம் நிலை.

அன்பர் – உதாரணம், விளக்கம் வேண்டும்.

நண்பர் – பயந்தவனுக்கும் தைரியசாலிக்கும் என்ன வித்தியாசம்? பயந்தவன் ஏமாந்தவன், எவரும் கேலி செய்வார்கள், அவன் அடங்கிப் போவான். தைரியசாலியை எவரும் மட்டம் தட்டிப் பேசமாட்டார்கள். அவனே அடுத்தவருக்குத் தொந்தரவு கொடுப்பான். பயந்தவனுக்கும் தைரியசாலிக்கும் உள்ள வித்தியாசம், சிறியவனுக்கும், பெரியவனுக்கும் உண்டு.

சிறியவன் தனக்கில்லை என ஒதுங்குபவை ஏராளம். மேடைப் பேச்சு எனக்கில்லை. முதல் மார்க் எனக்கு வாராது. வெளிநாடு போவதெல்லாம் என்னைப் போன்றவனுக்கில்லை. என்னை யார் பாராட்டப் போகின்றார்கள்?

அன்பர் – அது உண்மைதானே.

நண்பர் – உண்மை என நம்பினால் அது பலிக்கும். நம்பாவிட்டால் பலிக்காது. அது உங்கள் மானேஜர் பிரச்சினை போன்றது.

அன்பர் - என் கம்பனி சிறியது. நான் இப்படித்தான் நினைக்கிறேன். எனக்கு அதுவே சட்டமா?

நண்பர் - 1½ கோடி கம்பனி முதலாளிக்கு 70 கோடியாக ஆசையிருக்கும். நம்பிக்கையிருக்காது. முடியாது என்று நம்புவார்.

அன்பர் - என்ன செய்வது?

நண்பர் - நேற்று ஒரு கம்பனி மானேஜர் வந்தார். அவர் மும்பையில் வேலை செய்கிறார். ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் சம்பளம். மாதம் 16 லட்சம் சம்பளம். கேட்டவர் 2 கோடியில்லை 1 கோடி என்கிறார். அவரால் நம்பமுடியவில்லை. அதைக் கேட்டால் "அதெல்லாம் நமக்கில்லை'' என்று மனம் உடனே கூறுகிறது. இரண்டு செய்ய வேண்டும்.

1. முதலில் நம் மனத்திலுள்ள நம்பிக்கை நமக்குத் தெரியவேண்டும்.

2. இரண்டாவது அவற்றை நம்பக்கூடாது என முடிவு செய்யவேண்டும்.

மானேஜர் பிரச்சினையிலிருந்து விலகியதுபோல் இதிலிருந்து விலகவேண்டும்.

அன்பர் - விலக முடிந்தால்,

நண்பர் - விலகியது நிரந்தரமானால், உங்கள் கம்பனி தொடர்ந்து வளரும். 70 கோடியை எட்டும்.

அன்பர் - நம்பமுடியவில்லையே.

நண்பர் - நம்பியவருக்குப் பலிக்கும்.



அன்பர் - அடுத்தது,

நண்பர் - முதல் கட்டத்தில் மேல் மனத்திலிருந்து விலகவேண்டும் என்று கூறினேன். அடுத்த கட்டத்திற்கு ஆழ்மனத்திலிருந்து (subconscious) விலகவேண்டும் என்று கூறலாம். எவ்வளவு பெரிய காரியமும் எனக்கு முடியும். மனத்தால் முடியாவிட்டால் ஆத்மாவால் முடியும் என நம்பவேண்டும். முதலில் கூறியபடி அன்னை எவரையும் அவரவர் மனப்பான்மையின்படி நடத்திச் செல்கிறார்.

அன்பர் - விஷயமே மனப்பான்மையில்தானிருக்கிறது என்று கூறலாமா?

நண்பர் - இதைப் பலவகையாகக் கூறலாம்.

1. ஆழ்மனத்திலிருந்து விலகினால் வாழ்வு நாட்டளவு விரியும்.

2. அமைதி ஆழ்மனத்தை எட்டினால், யோகம் ஆரம்பிக்கும்.

3. எதை நம்புகிறோமோ அது பலிக்கும்.

4. பரந்த மனம் பரநலம் பூண்டால் சிறியவன், பெரியவனாகிப் பெரியவர்கட்குத் தலைவனாவான்.

5. பிரச்சினையை வளர்ப்பதும், வாய்ப்பை உற்பத்தி செய்வதும் உலகமன்று, வெளியாரில்லை, நாமே, நம் மனமே.

6. நம் மனத்தின் திறமையை நாம் அறியவேண்டும்.

அன்பர் - அன்னை என்ற நூலிலிருந்து இரு வாக்கியங்களைப் பற்றி கூறினீர்களே, அது என்ன?

நண்பர் - இந்நூல் அன்னையின் அவதார நோக்கத்தை ஆன்மீகக் கண்ணோட்டத்தில் முழுமையாகக் கூறுகிறது. மஹேஸ்வரி, மகா காளி, மகாலட்சுமி, மகா சரஸ்வதி அம்சங்களுக்கு மேலாக மஹா சக்தி அம்சத்தைக் கூறி, இன்றுவரை உலகில் வெளிப்பட்ட அம்சங்கள் இவை. வெளிப்படாதவை உண்டு என்கிறது.

நீங்கள் மானேஜர் பிரச்சினையை விலக்கி நிம்மதி கண்டதுபோல் **யோகம் சரணாகதியால் அன்னையின் எல்லா அம்சங்களையும் பெறும் என்பது கருத்து.** அவ்வுயர்ந்த யோக இலட்சியத்தின் ஆரம்பமான வாழ்வின் இலட்சியத்தை நாம்

- மேல் மனத்தை விலக்கி,
- ஆழ் மனத்தை விலக்கிக் காணலாம்,

எனச் சொல்ல வந்தேன். மானேஜர் பிரச்சினை தீர்ந்து போனதால் அதைக் கருதவில்லை.

அன்பர் - அன்னையை அறியும் சரணாகதி என்பதால் நெஞ்சு நிறைகிறது. ஆத்மா வெளிவருகிறது. மேலும் கேட்க ஆசையாக இருக்கிறது.

நண்பர் - நமக்கு முறை என்பதேயில்லை. **சரணாகதியே எல்லாம்.** சரணாகதி மனிதனுக்கு எளிதில் எட்டாது.

அன்பர் - நம்மால் ஏதாவது முடியுமல்லவா?

நண்பர் - நெஞ்சு நிறைவதும், ஆத்மா வெளிவரும் மனம் அமைதியாக இருப்பதால், அமைதி வளர்ந்தால் **ஆத்மா**



**வெளிவரும்.** வளரும் அமைதி தானே வளர்ந்து ஒரு நிலையில் நின்றுவிடும்.

அன்பர் - நான் இப்பொழுது அதைக் காண்கிறேன்.

நண்பர் - வளரும் அமைதி நம்மை (நம் personality) மலர்ந்து விரியச் செய்யும். இதற்கு ஏற்புத்திறன் receptivity எனப் பெயர். நூலின் கருத்து ஒன்றை நாம் கருதினால், அக்கருத்தின் சக்தியும் நாமும் சந்திப்போம். அன்னையின் அந்த சக்தி நம் வாழ்வில் பலிக்கும்.

அன்பர் - நம் பர்சனாலிட்டியைப் பெரிது செய்யலாம். அன்னையை அதிகமாக உணரலாம். இரண்டும் சந்திப்பது சித்தியாகுமோ?

நண்பர் - நூலில் கூறும் எல்லா அன்னையின் சக்திக்கும் நம் பர்சனாலிட்டி முழுவதும் திறந்து, விரிந்து, மலர்ந்து ஏற்பது நம்மால் முடிந்த சரணாகதி.

அன்பர் - ஸ்ரீ அரவிந்தர் கேட்கிறார், ‘‘அன்னை உன் சரணாகதியை ஏற்றபின் வேறென்ன வேண்டும்’’ என்கிறார்.

நண்பர் - ஏதோ ஓர் அளவில் சமர்ப்பணம், சரணாகதி பலித்தால் அதைத் தொடர்ந்து போற்றுவதும், வளர்ப்பதும் நம் கடமை.

அன்பர் - **தொடர்ந்து அனுபவிப்பதும் நம் பாக்கியம் என்று தோன்றும்.**

நண்பர் - சினிமா, கதை, இலக்கியம், காவியம் எல்லாம் மனிதனுடைய இந்த இலட்சியத்தைக் காதலாக, உண்மையாக, வீரமாக, தைரியமாக, தியாகமாக,

தவமாக வர்ணிக்கின்றன. **ஓர் இழை பலித்தால் அந்த சினிமா உலகப் பிரசித்தி பெறுகிறது.**

அன்பர் - உலகில் பரிசு வாங்குபவர் எல்லாம் இப்படித்தானிருக்கிறார்கள்.

நண்பர் - உலகம் அன்னையை இந்த விதமாக ஏற்கிறது என நாம் அறிகிறோம். ஆரோவில் ஸ்தாபிக்கப்பட்டபின் உலகயுத்தம் வாராது என்றார் அன்னை. இந்த வாரம் அணுகுண்டு ஒழிப்பை - 2/3 பாகம் ஒழிப்பை - அமெரிக்காவும் ரஷ்யாவும் ஏற்று கையெழுத்திட ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அன்பர் - இவ்வளவு பெரிய விஷயம் யார் கண்ணிலும் பட்டதாகத் தெரியவில்லையே.

நண்பர் - பெரு வெற்றிகள் பறையறைவிப்பதில்லை என்று அன்னை கூறுகிறார். ஆயுதத் தளவாடக் குறைப்பு அமைதியின் வெற்றி.

அன்பர் - நான் ‘‘அன்னை’’ என்ற நூலைப் பலமுறை படித்திருக்கிறேன். இப்படியெல்லாம் எனக்குத் தோன்றவில்லை.

நண்பர் - மானேஜர் பிரச்சினையால் மனம் அமைதியாய் விட்டதால், இப்பொழுது “அன்னை”யைப் படித்தால் அதிகப் பலனிருக்கும்.

அன்பர் - இங்கு, இப்பொழுது நாம் அந்த அமைதியைப் பற்றிப் பேசும்பொழுது அவ்வமைதி பேரமைதியாகத் தெரிகிறதே.

நண்பர் - அமைதியை உணர்வது மனம்.



அமைதியைப் பெற்றிருப்பது ஆன்மா.

ஆத்மா விழித்து மனத்தில் வெளிப்படுவது, உணர்வில் வெளிப்படுவது, உடலில் வெளிப்படுவது அடுத்த அடுத்த கட்டங்கள்.

அன்பர் - உடலில் வெளிப்படுவதை நன்றி என்கிறார் அன்னை. நன்றி எழும்பொழுது உடல் புல்லரிக்கும்.

நண்பர் - உடல் புல்லரித்து நன்றியை உணர்வது யோகம் என்கிறார் அன்னை.

அன்பர் - **எப்பொழுதோ ஒரு முறை நாம் அதை உணர்கிறோம். நம்மைப் பொருத்தவரை அதுவே இறைவன் வரும் தருணம் என்று கூறலாமா?**

நண்பர் - நாமாக ஒரு காரியத்தைச் செய்ய நினைக்கக்கூடாது என்கிறார் பகவான்.

அன்பர் - சர்வ ஆரம்பப் பரித்தியாகம் என்பது அதுதானே.

நண்பர் - சன்னியாசம் புறத்தியாகம். தியாகம் அகம் பற்றறுப்பது. அதனால் சன்னியாசத்தைவிட தியாகத்தை உயர்வாகக் கூறுகிறது கீதை.

அன்பர் - பகவான் சர்வ ஆரம்பப் பரித்தியாகத்தைப் பற்றிக் கூறுகிறார்.

நண்பர் - அதுவே பூரண சரணாகதியாகும்.

✯ ✯ ✯

## அபரிமிதமான செல்வம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

குழந்தை தானே வளர்வது போல் சமூகம் தானே வளர்கிறது. குழந்தையின் வளர்ச்சிக்குச் சாப்பாடு, கவனம், காற்று என்பவை துணை செய்கின்றன. அதேபோல் சமூகம் தானே வளர்கிறது. டெக்னாலஜி, மூலதனம், கனிப்பொருள்கள், பணம், போக்குவரத்து என்பவை துணை செய்பவை. சமூக வளர்ச்சியில் பொருளாதார வளர்ச்சி ஒன்று. தானே வளராத சமூகத்திற்குப் பணமோ, டெக்னாலஜியோ, மற்ற எதுவோ பயன் தாராது. சமூகத்தின் வளர்ச்சி தன்னிச்சையாக வளர்வது.

சமூகத்தின் வளர்ச்சியைப் பல கோணங்களில் பார்க்கலாம் என்றாலும், பண்பால் சமூகம் வளர்வதைக் கருதுவோம். பண வளர்ச்சியே நம் கருத்து, சமூகமன்று. மனித வாழ்வு சௌகரியமாவது சமூக வளர்ச்சி. மனிதனுக்கு வசதியும் சௌகரியமும் வருகின்றன. இது சமூகத்தின் நல்லெண்ணம். மனிதன் வசதியாக வாழவேண்டும், நீண்ட ஆயுளுடனிருக்கவேண்டும், சுத்தமான சூழ்நிலையில் ஆரோக்கியமாக இருக்கவேண்டும், பற்றாக்குறையால் பதறக்கூடாது, படிப்பறிவு பெறவேண்டும் என்பது சமூகத்தின் நல்லெண்ணம். இதன் பிறகு சமூகம் அவனுக்கு அதிக வசதி தரும்பொழுது குறைந்த விலைக்குத் தருகிறது. இன்றைய சமூகத்தின் நல்லெண்ணம் மனிதனுக்கு மலிவுப் பொருளாக வருகிறது. நாம் வாங்கும் பொருள் அதிக வசதி தருவதாகவும், குறைந்த விலையுள்ளதாகவு மிருக்கின்றது. கம்ப்யூட்டரிலும், தினசரி பேப்பரிலும் இதைத் தெளிவாகக் காணலாம். மக்கள் செலவைக் குறைத்து அதிக வசதி பெறுவதால் பணம் உபரியாக அவர்கள் கையிலிருக்கின்றது. ஏராளமாகப் பணம் மக்கள் கையிலும், பாங்க்களிலும், கம்பனிகளிலுமிருப்பதால் வட்டி குறைகிறது. இந்தியாவில் டெபாசிட் போட்டால் 12% வட்டி கிடைக்கும். ஐரோப்பா, அமெரிக்காவில் 3%, 3½% தான் கிடைக்கும். ஜப்பானில் 0% வட்டி. அனைவரும் இதை அறிந்தாலும் சமூகக் கண்ணோட்டத்தில் இதன் காரணம் எவருக்கும் விளங்கவில்லை.

இதை நான் maturity சமூகம் முதிர்ச்சியடைந்தது என்று கூறுகிறேன். இக்கட்டத்திற்குப்பின் பணம் தானே பெருகும் (self-multiply). வேரூன்றிய செடி இனி எவரும் நீர்ப் பாய்ச்சாமல் தானே வளர்வதுபோல் இக்கட்டத்திற்குப் பிறகு பணம் தானே வேறு உதவியோ, காரணமோயில்லாமல் பெருகும்.

**இன்று சமூகம் பெறும் திறன் நாளை தனி மனிதனுக்கு வரும்.**

மனிதன் தன்னிடம் உள்ள பணத்தை தானே பெருக்கிக்கொள்ள முடியும் என்ற திறன் பெறுவான். அது நடக்க நாளாகும். ஓர் ஆசிரியர் எழுதும் புத்தகம் பிரசுரமானால் அனைவருக்கும் கிடைக்கும். அதற்கு இடைவெளியுண்டு. ஆசிரியருடைய நண்பருக்கு, பிரசுரத்திற்கு முன்பே பிரதி கிடைக்க முடியும். சமூகம் இன்று பெற்ற திறனை - பணம் தானே பெருகும் திறனை - மனிதன் இன்றே பெற வழியுண்டு. அதற்கு மனிதன் சமூகத்தை எட்டவேண்டும், இத்திறனுடைய மூலத்தை எட்டித் தொடவேண்டும்.

- **நல்லெண்ணத்தால் சமூகம் தன் பணத்தைத் தானே பெருக்கிக் கொள்கிறது.**
- **நல்லெண்ணமுள்ள மனிதன் சமூகத்தை இவ்விஷயத்தில் தொடமுடியும். அதன்மூலம் இத்திறனைப் பெறமுடியும்.**

மனிதன் நல்லெண்ணம் பெறுவதுடன், தானே அவனுள் நல்லெண்ணம் பெருகும் மனநிலையை அடையவேண்டும். அதன்மூலம் சமூகம் பெற்ற திறன் அவனுக்கு அவனுடைய சொந்தத் திறனாக வரும்.

கிராமப்புற வாழ்வையும் பம்பாய்போல் பெருநகர வாழ்வையும் எடுத்துப் பார்ப்போம். கிராமத்திலும், பம்பாயிலும் ஒரே திறனுடையவர் ஒரே வேலையைச் செய்வதானால் இங்கு 10 பேர் வேலை செய்தால், அங்கும் பத்து பேர் வேலை செய்தால் வித்தியாசம் (values) பண்புகள். செய்பவருடைய திறமை சமம். பண்புகள் இங்கு கிராமப்புறப் பண்புகள். அங்கு பம்பாய்க்குரியது. பலன் வரும்பொழுது நகரத்தில் 5 அல்லது 10 மடங்கு அதிகப் பலன் பணமாக வரும். அவ்வதிக வருமானம் பண்புகள் சம்பாதித்தது.

பண்புகள் பணத்தை ஈட்டும் என்பதை ஏற்பது சிரமமில்லை. ஒரே படிப்பு, வயது, திறமை, சந்தர்ப்பமுள்ள இருவர் பண்பால் மாறுபட்டிருந்தால் அவர்கள் சாதனைகள் அதிகமாக மாறுபட்டிருக்கும். அதைப் பணமாகவும் கணக்கிடலாம். அந்த வித்தியாசம் பண்புக்குரியது.

**பண்பில்லாமல் செயலில்லை.**
**நல்லதோ, கெட்டதோ செயலுக்குப் பண்புண்டு.**

மேற்சொன்ன உதாரணத்தில் மாறுபடுபவை punctuality, சுத்தம், நியாய விலை, பேரம் பேசாதது, குறித்த நேரத்தில் கொடுப்பது, நாணயம், இனிமை, பாதுகாப்பு, பிறர்நோக்கு ஆகியவை.

ஓர் இடத்தில் தலைக்கு மாதம் ரூ.2000/- வந்தால் அடுத்த இடத்தில் ரூ.20,000/- வருகிறது. பண்புகள் 10 மடங்கு சம்பாதிக்கும் எனக்கூற இவ்வுதாரணம் உதவும். அன்னையை அழைப்பது



அன்னையைப் பொதுவாக ஏற்பது. அன்னையின் பண்புகளை ஏற்பது, ஒவ்வொரு வேலையிலும் ஏற்பது நாம் அதிகபட்சம் அன்னையைப் பெறுவதாகும். அன்னைக்கு முக்கியமான பண்புகள் நிதானம், இனிமை, பொறுமை, தெளிவு, பிறர்நோக்கு போன்றவை.

பண்புகள் இரு முனையில் செயல்படுவதாக (double opening) யோக பாஷையில் கூறலாம். மேலே போவது சிறப்பு, அளவு, பரப்பு ஆகியவற்றை வளர்க்கும். மனத்தின் வளர்ச்சியைக் கீழே போகும்போது உடலுக்கும், உணர்வுக்கும் தருவது அடுத்தது.

தன் பணத்தைத் தானே பெருக்கிக்கொள்ள முன்னோடியாக ஒருவர் கற்றுக்கொண்டால், அது அவருக்குப் பெரிய பலன் தரும். ஆர்ட்டீஷியன் கிணறுபோல தானே பெருகுவது தடை செய்யாமல் பெருகும். ஒரு விதை ஓராயிரம் விதையைத் தருவதைப்போல் அது பெருகும். தானே பெருக ஆரம்பித்தபின் அதற்கு வெளியுதவி தேவையில்லை. தானே வேரூன்றி, பலன் தரும்.

மொழி குழந்தை பிறந்தவுடன் பிறப்பதில்லை. குழந்தை நெடுநாள் பேச்சைக் கேட்கிறது. ஒரு நாள் பேச ஆரம்பிக்கிறது. சில சொற்கள், பிறகு மொழியாகின்றன. மனிதன் வளர்ந்தபின் சிலர் பேச்சாளராகின்றனர். எண்ணம் உள்ளே சேர்ந்தால் பேச்சாக வெளிவரும். சக்தி, திறமை, நம்பிக்கை மனதில் சேர்ந்தால், பணமாக வாழ்வில் வெளிப்படும்.

பணம் ஒரு பொருளன்று. அது ஒரு சின்னம். நம்பிக்கையின் சின்னம். பிறரை நம்புவது, பரஸ்பர நம்பிக்கை, சமூகத்தையும், அதன் ஸ்தாபனங்களையும் நம்புவது, பொதுவாக மனித மனத்திலுள்ள நல்லெண்ணத்தை நம்புவது ஆகியவை நம்பிக்கையின் உருவங்கள்.

இன்று கொலை நடக்கிறது, கொள்ளையடிக்கிறார்கள், ஏமாற்றுகிறார்கள், பிரயாணத்தில் ஆபத்து வருகிறது. புயல், பூகம்பம்

வந்தால் சமூகம் உதவுகிறது. இக்கொடுமைகள் குறைந்து வருகின்றன. ஒரு நாள் மனித வாழ்வில் சூறையாடுவதும், கொலையும், கொள்ளையாகவுமிருந்தது. அது மாறி நாகரீகம் வந்தும் அப்பழைய பழக்கங்கள் இன்னும் தொடர்கின்றன. சமூகம் வளர்ந்து மாறி தன் நல்லெண்ணத்தைப் பிரவாகமாக மனிதனுக்குக் கொடுப்பதை அன்று ஒரு நாள் உலகம் எப்படியிருந்தது, இன்று எப்படி மாறியுள்ளோம் என மேற்சொன்னவை காட்டுகின்றன. இராணுவம் எல்லையைப் பாதுகாக்கிறது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுகிறது. இவை சமூகத்தின் நல்லெண்ணத்தால் நடப்பவை. உடல்நலத்தையும் கல்வியையும் கட்டாயமாக சமூகம் நமக்குத் தருகின்றது. இன்ஷுரன்ஸும், பென்ஷனும் சமூகத்தை நம்பலாம் என்பதற்குரிய சின்னங்கள். நம்பிக்கைக்கு ஓர் அளவுகோலிருந்தால், ஆயிரம் மடங்கு நம்பிக்கை வளர்ந்துள்ளதைக் காட்டும். இந்த நம்பிக்கை பணம். முடிவில்லாத வழிகள் மூலம் முடிவில்லாத வளர்ச்சி பணத்திற்குரியது.

*தொடரும்....*

☆ ☆ ☆

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தாழ்வில் உள்ள உயர்வைக் காணுவது மனிதனின் பெருந்தன்மை. அத்துடன் உயர்வோடு சேர்ந்து உயர விரும்புவது இயற்கை.

*தாழ்ந்ததின் உயர்வைக் கண்டும்,*
*உயர்ந்ததின் உயர்வை ஏற்றும் உயரலாம்.*



**சாவித்ரி"**

## P.27. Into the immobile ocean of his calm.

**ஹிருதய சமுத்திரத்தின் அனந்தமான அமைதி.**

இப்பக்கத்திலுள்ள இதரக் கருத்துகள் :

- மனிதன் தன்னையே ஏமாற்றுபவன்.
- உயிர்த்துடிப்பை உடன்பிறப்பில் காண்பான்.
- ஒருவர் சந்தோஷம் உலகத்தின் சந்தோஷம்.
- அலை அலையான கவலையும், ஆர்ப்பரிக்கும் ஆனந்தமும்.
- எண்ணம் மனத்தில் ஒலியாக எழுந்தது.
- ஒருவர் எண்ணத்தை உலகம் பிரதிபலிக்கும்.
- உலகமே எண்ண அலையாக என்னுள் புகுந்தது.
- ஆத்மா அடுத்த ஆத்மாவின் உறவை நாடியது.
- உறவின் செறிவும், பாசத்தின் பிணைப்பும்.
- தாமரை இலைத் தண்ணீரென விலகி நிற்கும் பாங்கு.
- மந்திரமென மனம் மகிழ்ந்து நெகிழ்ந்தது.
- மேக மண்டலத்தின் இசை மேலிருந்து தழுவியது.
- வாழ்வின் அடிமைக்கு வலிய சுதந்திரம்.
- ஆத்மாவின் அரவணைப்புக்குக் கூடிவரும் கூட்டாளி.
- தசையும் நரம்பும் தவழ்ந்து வரும் சங்கீதம்.
- மின்னெலெனத் தெறிக்கும் பூரிப்பும், புளகாங்கிதமும்.
- ஆன்மாவின் அற்புதத்தை வெளியிடும் உடல்.
- சுவர்க்க லோகத்தின் சுகமான சுவடுகள்.
- மனித உடலைத் தாங்கும் அருளின் அற்புதங்கள்.
- ஆழ்ந்த நித்திரையிலுள்ள ஆன்மாவின் அம்சங்கள்.

உலகை ஏமாற்ற முனையும் மனிதன் முடிவில் எவரையும் ஏமாற்ற முடியாது என்று காணும்பொழுது, மேலும் காண்பது "இதுவரை நான் என்னைமட்டும் ஏமாற்றியுள்ளேன்" என்பதாகும். நம் வாழ்வு மேல் மனத்திற்குரியது. மனித வாழ்வு அடிமனத்திற்குரியது. மேல் மனம் தன்னையறியும், அடிமனம் அனைவரையும் அறியும். ஆபீஸில் 5.11 P.M. மணிக்கு ஒருவர் வீட்டிற்குப் போக நாற்காலியை விட்டு எழுந்தால், அவர் வளர்க்கும் நாய் அதுவரை வீட்டில் படுத்திருந்தது, 5.11க்கு எழுந்து வெளியே வந்து தெருக்கோடிக்கு வந்து எஜமானனுக்காகக் காத்திருக்கிறது. அவர் புறப்பட்டதை அவர் நாய் அறியும். ஒருவர் போனில் பேசினார். அவருடனிருந்தவர் கேட்பவர் மாமனாருக்கு வேறொரு போனில் ஒரு செய்தி சொல்லப் போனார். முதல்வர் போன் cut ஆயிற்று. மருமகனுக்கு, மாமனாரிடம் பேசுவது சூட்சுமமாகத் தெரிந்து அதனால் ஏற்படும் வெறுப்பு பேச்சை cut செய்கிறது. மருமகனுக்கு அடுத்தவர் மாமனாரிடம் பேசியது தெரியாது. **நம் எண்ணங்கள் அடி மனத்தில் கலக்கும். உணர்வுகள் உறவாடும், உடல்களே அடி மனத்தில் இணைகின்றன என்பது ஆன்மீக உண்மை.**

✯ ✯ ✯

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஒரு காரியம் முடியும் என்று தெரிகிறது. அதை ஆர்வமாகப் பின்பற்றுகிறோம். அது முடிகிறது. சில சமயங்களில் முடிவதில்லை. மனம் தன் திறமைக்கேற்ப சாதிப்பதின் வழி இது.

*மனத்தின் சாதனை நிலையற்றது.*





## சரணாகதி சமாதியைக் கடந்தது

*(ஆகஸ்ட் 15, 2002 அன்று இராணிப்பேட்டை தியான மையத்தில் திருமதி வசந்தா லஷ்மிநாராயணன் நிகழ்த்திய உரை)*

பூரண யோகம் பிரம்மத்தை வாழ்வில் கண்டு உலகில் துன்பமும், மரணமும் இல்லை என இருப்பது பேரானந்தப் பெருவழி. ஞானயோகம் ஜீவனின் நான்கு கரணங்களில் தலையான ஆன்மாவைப் பிரித்து மோட்சம் பெறுவது. பூரண யோகம் ஜீவனின் நான்கு கரணங்களிலும் உள்ள வளரும் ஆன்மாவை விடுவித்து ஜீவாத்மாவைப் பரமாத்மாவாக்கி வாழ்வை தெய்வீக வாழ்வாக்கியது.

ஹதயோகம் உடலில் உள்ள ஆன்மாவாகிய அன்னமயப் புருஷனை அடைந்து குந்தளினியைத் திறந்து ஒவ்வொரு சக்கரமாக மேலே போய் சகஸ்ரதளத்தை அடைந்து மோட்சம் பெறுகிறது. கர்மயோகம் அதே பாதையை பிராணமயப் புருஷன் மூலமாக அடைகிறது. ஹதயோகத்திற்கு ஆசனமும், கர்மயோகத்திற்குப் பிராணயாமமும் பயன்படுகின்றது. ஞானயோகம் அதே காரியத்தை மனோமயப் புருஷன் மூலமாக நிறைவேற்றுகிறது. இதன் முக்கியக் கருவி சமாதியில் முடியும் நிஷ்டை.

பூரண யோகம் மோட்சத்தை முடிவாகக் கொள்வதில்லை. மோட்சத்தை ஆரம்பமாகக் கொள்கிறது. இறைவன் எந்த ஆனந்தத்திற்காக சிருஷ்டித்தானோ அந்த ஆனந்தத்தைத் தன் ஆன்மீக அனுபவமாகக் கொள்கிறான். பரம்பொருள் உலகமாயிற்று என்பது கொள்கை. ஜடஉலகம் பரிணாமத்தால் மனிதனாயிற்று

என்பது விளக்கம். பரம்பொருள் எந்த இன்பத்தை சிருஷ்டியில் நாடுகிறானோ அதுவே பூரண யோகத்திற்கு ஆத்மானுபவ மோட்சம் முதற்கட்டமானால் இந்த ஆத்மானுபவம் முடிவான கட்டமாகும். இதற்கிடையே உள்ள கட்டங்கள் :

- ஆன்மா மட்டும் பரமாத்மாவை அடைவதற்குப் பதிலாக மனமும் ஆன்மாவும் பரமாத்மாவை அடையலாம்.
- அவற்றுடன் உணர்வும் பரமாத்மாவை அடையலாம்.
- உடலும் பரமாத்மாவை அடையலாம்.
- பரமாத்மா இறங்கி மனத்தை அடையலாம்.
- இறங்கி வரும் பரமாத்மா உணர்வை அடையலாம்.
- மேலும் இறங்கி உடலை அடையலாம்.
- ஒவ்வொரு கட்டத்திலும் ஜீவியம் அதற்கு அடிப்படையான பொருள் என்று இருப்பதால் இந்த ஆறு கட்டங்களும் 12-ஆகவும் பிரியும்.

மோட்சம் முதற்கட்டமானால் பூரண யோகம் கூறும் திருவுருமாற்றம் முடிவான 12-ஆவது கட்டமாகும். இந்த யோகத்தைப் பூர்த்தி செய்ய யோகங்கள் அறிந்த ஆசனம், பிராணாயாமம், மந்திரம், தியானம், சமாதி ஆகியவற்றைப் பயன்படுத்தாமல் பகவான் கூறும் முறை சரணாகதி. சரணாகதிக்கு முந்தைய நிலை சமர்ப்பணம். இந்த யோகம் மனிதனுக்கில்லை, இறைவனுக்கு என்று கூறிய பகவான் நமக்கு அளித்த முறை சரணாகதி. யோகத்தை மேற்கொண்டவர்கள் அவர்கள் அனுபவத்தைச் சரணாகதி செய்வது மனிதனுக்குரியதன்று; ஆண்டவனுக்குரியது என்று கண்டார்கள். சமர்ப்பணத்தைச் செய்ய ஆரம்பித்தால் இது மனித முயற்சிக்குட்பட்டதில்லை என்று தெரியும். சமர்ப்பணத்திலுள்ள சிரமத்தைக் கடந்து சரணாகதியை வெற்றிகரமாகப் பின்பற்றினால் முறை முடிவதற்குமுன் முழுப்பலன்



வருகிறது. சரணாகதிக்கு அத்தகைய சக்தியைக் கொடுக்கும் தத்துவம் என்ன? இந்தத் தத்துவம் வெளிப்படுத்தும் சக்தி என்ன?

திறமை என்பது சிறு முயற்சியில் பெருங்காரியத்தைச் செய்வது. சரணாகதிக்குச் செய்யும் முயற்சி நம் முயற்சியை வாபஸ் வாங்குவது. அப்படி எனில் முயற்சியே இல்லை என்று பொருள். முயற்சியே இல்லாத பலன் எப்படி முழுப் பலனாக இருக்கமுடியும்? அது முழுப் பலனாக இருப்பதுடன் பலனைத் தன்னுட் கொண்ட முழுமையாகவும் இருக்கும். அந்த முழுமைக்குப் பெயர் பரம்பொருள். இதை வேறு வகையாகச் சொன்னால் எதையும் செய்யாமல் எல்லாவற்றையும் பெறுவது சரணாகதி என்று கூறலாம். இது ஒரு முறையானால், இதற்கு ஒரு தத்துவம் இருக்கும். இதுபோன்ற விஷயத்தை பிரம்மத்தில் மட்டும்தான் கேள்விபட்டு இருக்கிறோம். பிரம்மம் எதுவுமே இல்லாமல் எதுவுமாகவும் இருக்கும். சரணாகதியின் தத்துவம் பிரம்ம தத்துவமாகும். முழு சலனத்திற்கு முழுச் சக்தியுண்டு. முழுச் சக்தி முழுமையான இலக்கைப் பெறும். முழுமையாகத் தன்னை அழித்து முழுமையான குறிக்கோளை ஏற்பது அந்தச் சலனம். வாழ்க்கையில் குழந்தை தாயாரை நம்புவது அப்படிப்பட்டது. நாம் சமூகத்தை ஏற்பதும் அது போன்றதே.

நாம் மனத்தால் செயல்பட்டால் முயற்சி மனத்திற்குரியது. உடலால் செயல்பட்டால் முயற்சி உடலுக்குரியது. இவை பகுதியான லோகங்கள். பகுதியான லோகத்தில் பகுதியான முன்னேற்றம் உண்டு. இவை நம் சொந்த முயற்சியால் செய்பவை. சொந்த முயற்சிக்குரிய பலன் பகுதி. உடலால் செயல்படுபவன் மனத்திற்குப் போக முயல்வது அடுத்த கட்டத்திற்குப் போவது. அதற்காக உடலின் முயற்சி பயன்படாது. உதவி மனத்தில் இருந்து வரவேண்டும். உதாரணமாக ஒருவன் எலக்ஷனில் நிற்பதற்கு அவன் முயற்சி செய்யலாம். முயற்சிக்குத் தகுந்த பலனுண்டு. வெற்றி பெற்றபின் அவன் மந்திரியாவதோ மற்ற உயர்ந்த பதவிகளை அடைவதோ அவனுடைய முயற்சியால் நடக்காது. எங்குப் போக அவன் விரும்புகிறானோ அங்கிருந்து உதவி வரவேண்டும். இந்த உதவி இருந்தால் மனிதன்

உடலிலிருந்து மனத்திற்கும், மனத்திலிருந்து சத்திய ஜீவியத்திற்கும், தொடர்ந்து சத் புருஷனுக்கும், அதையும் கடந்து பிரம்மத்திற்கும் போகமுடியும். அது நடக்க உயர்ந்த நிலை நம்முள் செயல்பட நாம் அனுமதிக்கவேண்டும். அப்படி அனுமதிப்பதை யோகம் சரணாகதி என்று கூறும். முழுப்பலனுக்கு முழுச் சரணாகதி தேவை. பிரம்மத்திற்குத் தன்னை அர்ப்பணிப்பதே தத்துவம். எதுவுமே இல்லாதவன் எல்லாமுமாக மாறுவது பலன்.

நாம் புதியவைகளைக் கற்றுக்கொள்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாகத் திறமை வளர்கிறது. திறமை வளர வளரத் திறமை மனத்திலிருந்து விடுபடுகிறது. அதாவது கைவேலை செய்யும்பொழுது மனம் வேறு ஒரு காரியத்தைக் கவனிக்கிறது. காரியம் மனத்தின் கவனம் இல்லாமல் நடைபெறுகிறது. இதை யோக பாஷையில் ஆழ்மனம் செயல்படுகிறது என்று கூறுகிறோம். ஆழ்மனம், மேல் மனமாவதே பூரண யோகத்தின் குறிக்கோள். இன்று நமது ஜீரணம், இதயத் துடிப்பு, போன்றவை இன்று ஆழ்மனத்தால் நடத்தப்படுகிறது. நாம் கற்றுக்கொள்பவைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆழ்மனத்தை அடைகின்றது. மேல்மனம் ஆழ்மனத்திற்குச் சரணாகதி அடைகிறது என்று சொல்லலாம். நாம் வளர்ந்து சமூகத்தை ஏற்கும்போது ஓரளவு சிரமப்படுகிறோம். நாளாவட்டத்தில் எளிமையாக முழுவதும் இணைகிறோம். இதை நாம் சமூகத்திற்குச் சரணடைவது என்று கூறலாம்.

நாம் சமூகத்தின் மூலம் வாழ்வோடு இரண்டறக் கலக்கிறோம். வாழ்வின் பின்னால் பரமாத்மா இருக்கிறார். வாழ்வு சமூகத்தின் மூலமும், பரமாத்மா வாழ்வின் மூலமும் நமக்கு இடைவிடாது சூட்சுமமாகத் தன்னை அறிவித்தபடி இருக்கிறார். பெரும்பாலும் இதுபோன்றவற்றை நாம் நம்புவது இல்லை. நம்பினால் பொருட்படுத்துவதில்லை. மூடநம்பிக்கை என்றும் ஒதுக்கிவிடுகிறோம். டெல்லியில் ஒருவருக்கு அடிக்கடி கனவில் ஒரு மாடு இவரை எங்கேயோ அழைத்துப் போவதுபோல் கனவு வரும். அதை அவர் நம்பினார். அவரால் ஒரு பால் பண்ணை நிறுவி பெரும் சொத்து



சேர்க்க முடிந்தது. இராஜாஜி பிறந்தவுடன் ஜாதகம் கணித்தவர் இந்த ஜாதகன் ஜட்ஜாக வருவான், வைஸ்ராயாக வருவான் என்று சொன்னார்கள். ஜட்ஜை நம்பலாம், வைஸ்ராய் என்றால் எப்படி நம்புவது என்றார்கள். இவை மேலுலகத்தில் இருந்து வரும் சூட்சுமமான அறிகுறிகள். அவற்றை நாம் பொருட்படுத்தினால் அதிலுள்ள உண்மையை ஏற்றுக்கொண்டால் அது பலிக்கும். அது பரமாத்மாவை நாம் வாழ்வில் ஏற்பது ஆகும். பரமாத்மாவை வாழ்வில் ஏற்க அறிவால் செயல்படலாம். உணர்ச்சியால் செயல்படலாம். அவை பகுதியான முயற்சிகள். அதற்குப் பலன் பகுதி. பரமாத்மாவிற்குச் சரணடைவது முழு முயற்சி. முழு முயற்சிக்குரிய பலன் நாமே பரமாத்மாவாக ஆவது.

முனைந்து கற்பது காலத்திற்குரியது. சரணாகதி அதைத் துரிதப்படுத்தும். நாம் எந்த அளவு பரமனை அறிகின்றோமோ, அந்த அளவு வேகம் அதிகமாகும். இது காலத்தைக் கடக்கும் சரணாகதி, பூரணமாகக் காலத்தின் மூன்றாம் கட்டத்தை அடையவேண்டும். அங்கு எதுவும் க்ஷணத்தில் முடியும். நாம் பரமனாவதும் க்ஷணத்தில் முடியும்.

சரணாகதி யோக தத்துவப்படி அறிவது சிறப்பு. எல்லா யோகத் தத்துவப்படியும் அறிவது மிகச் சிறப்பு. நாம் பல யோகத் தத்துவங்களை இங்குக் கருதுவோம். முரண்பாடு, உடன்பாடு என்பது ஒரு யோகத் தத்துவம். சரணாகதி இந்த மாற்றத்தில் எப்படிச் செயல்படுகிறது என்பது கேள்வி. இதன் வெளிப்பாடு தோல்வியே வெற்றி என்பது. தோல்வி வெற்றியாக மாற, சரணாகதி எப்படிப் பயன்படுகிறது? தோல்வி அடைந்தவன் சோர்ந்து விடுவான், குறைபடுவான், நம்பிக்கையை இழந்துவிடுவான். இவை தோல்வியை எதிர்ப்பதாகும். அதை உடன்பாடாக்க இந்தத் தோல்வி நமக்கு நல்லது என்று அவன் மனம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதனால் நல்லது வரப்போகிறது என்று அவன் நம்பவேண்டும். அப்படி நம்பினால் அவன் மனத்தில் முரண்பாடு உடன்பாடாகிறது. ஆந்திரா M.P.-க்கு

எலக்ஷனில் சீட்டுத் தரவில்லை. அவர் மனம் உடைந்துவிட்டார். தம் உரிமையை வற்புறுத்தினார். தலைமைபீடம் மறுத்துவிட்டது. அவரை யாரோ ஓர் அன்னை பக்தர் அன்னையைத் தரிசிக்கச் சொன்னார். தோல்வி ஏற்பட்டதால் அவருக்குக் கிடைத்தது அன்னையின் தரிசனம். அது தோல்வியில்லை. பெருவெற்றி. அன்னையைத் தரிசித்தார். மனத்திலிருந்த முரண்பாடு உடன்பாடாயிற்று. இவருக்கு அடுத்த மாநிலம் ஒரிஸாவில் இடம் கிடைத்தது. அது ஓரளவு ஏமாற்றமாக இருந்தது. அந்த எலக்ஷனில் எந்தக் காங்கிரஸ் M.P.-யும் ஒரிஸாவில் ஜெயிக்கவில்லை. இவர் மட்டும் அன்னை அருளால் ஜெயித்தார். மத்திய மந்திரி சபை அமைக்கும்பொழுது, ஒரிஸா தலைவர்கள் எவரும் இல்லாததால் ஒரிஸா சார்பில் இவரை மத்திய மந்திரியாக்கினர். அன்னை சக்தி முரண்பாட்டை உடன்பாடாக்குகிறது. தோல்வியை ஏற்பது சரணாகதி. சரணாகதி முரண்பாட்டை இவ்வகையாக உடன்பாடாக்குகிறது.

அடுத்த தத்துவம் ஜடமும், ஆன்மாவும் ஒன்றே. Life Divine-இல் இரண்டாவது, மூன்றாவது அத்தியாயங்கள் விளக்கும் தத்துவம் இது. பிரம்மம் சிருஷ்டியில் சத், அசத்தாகப் பிரிந்து காண்பது. அதை ஜடம், ஆன்மா என்று கூறுகிறோம். இவை இரண்டும் ஒன்றாகச் சரணாகதி எப்படி எழுகிறது? மூன்றாம் அத்தியாயத்தில் இவை இரண்டும் சிருஷ்டியை கடந்து இணைவதும், இரண்டாம் அத்தியாயத்தில் இவை இரண்டும் சிருஷ்டியில் இணைவதும் விளக்கப்படுகின்றன. சிருஷ்டியில் இவை சக்தியாக இணைகின்றன. சக்தியாக இணைய ஜடம் ரூபத்தை விட்டு வெளிவருகிறது. ஆன்மா தன் தூய்மையை விட்டு சக்தியாக வெளிவருகிறது. ஜடம் ரூபத்தை விட்டுக்கொடுப்பதும், ஆன்மா தன் தூய்மையை விட்டுக்கொடுப்பதும் சரணாகதியாகும்.

சத், அசத் சேர்ந்தது பிரம்மம். சத் என்பது புருஷன். புருஷன் என்பது ரூபம். அது சிருஷ்டிக்குரியது. சிருஷ்டியில் இருப்பது. அசத் என்பது நிர்வாணம், சிருஷ்டிக்கு அப்பாற்பட்டது. பிரம்மம் சிருஷ்டியை



ஏற்பது சத். பிரம்மம் சிருஷ்டியில் சிருஷ்டிக்கு அப்பால் இருப்பது. இவை இரண்டும் பிரம்மத்தில் இணைகின்றன. பிரம்மத்தில் இணைய சத் தன் சிருஷ்டிக்கும் திறனை விட்டுக்கொடுக்கவேண்டும். அசத் நிர்வாணத்தை விட்டுக்கொடுக்கவேண்டும். விட்டுக்கொடுக்கும் அளவில் சரணாகதி அங்கு ஏற்படுகிறது.

பாதாளமும், பரமனும், பாமரனில் இணையும் என்பது ஐந்தாம் அத்தியாயத்தில் விளக்கப்படும் தத்துவம். பரமன் பாமரனாக, தான் பரமன் என்ற நிலையை இழக்கிறான். பாதாளம் பாமரனாக, தன் பாதாளம் என்ற குணத்தை இழக்கிறான். இழப்பது சரணாகதி. இராமாவதாரம் மகாவிஷ்ணுவினுடைய அவதாரம். மஹாவிஷ்ணு தம் தெய்வ நிலையை சரணம் செய்து மனிதப் பிறவி ஏற்று வாழ்க்கையின் சட்டதிட்டங்களுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார். இது அவர் செய்யும் தியாகம். குரங்கு மனிதனாகிறது, குரங்கு குணத்தை விட்டு அது அறிவை ஏற்று நாகரீகமான மனிதனாக வாழ்கிறது. மனிதனான குரங்கிற்குக் குரங்கின் சுதந்திரம் பறிபோகிறது. குரங்கு மனிதனாவது பாதாளம் பாமரனாவது. மஹாவிஷ்ணு அவதாரமாவது பரமன் பாமரனாவது.

பிரபஞ்சமும், பிரம்மமும் மனிதனில் இணைகின்றன. பிரம்மம் பிரபஞ்சமாகி பிரபஞ்சம் மனிதனாகிறது என்பது ஸ்ரீ அரவிந்தம். பரிணாமத்தில் மனிதன் பிரபஞ்சமாகி பிரம்மமாகிறான். பிரம்மம், பிரபஞ்சம், மனிதன் மூன்றும் சேருமிடம் வாழ்வு. இது எப்படி ஏற்படுகிறது என்று இரண்டாம் புத்தகத்தில் மூன்றாம் அத்தியாயத்தில் கூறுகிறார். மனிதன் தன் அகந்தையை ஆத்மாவாகக் கருதுகிறான். அது உண்மையன்று. அது உண்மையில்லை என்று ஏற்றவுடன் அகந்தை கரைகிறது. அகந்தை கரைந்தபின் அங்கு இருப்பது புருஷன். இது உலகத்திற்குப் பொதுவான புருஷன். உலகத்திற்குப் பொதுவான புருஷன் ஒவ்வொருவர் நெஞ்சிலும் உள்ளது. உலகத்தின் அனுபவத்தை ஒருவருக்குப் பயன்படும்படி மாற்றிக் கொடுக்கிறது. மனிதன் இந்த உலகத்தின் அனுபவத்தைப்

புறத்தில் காணலாம். அது பிரபஞ்ச ஆத்மாவின் வாழ்வு. அதை அகத்தில் காணலாம். அதன் மையமாக இருப்பது பரமாத்மா. பரமாத்மா மனித வாழ்வின் பிரபஞ்சத்தின் மையம். பரமாத்மாவும், பிரபஞ்சமும் தங்கள் உயர்ந்த நிலையைவிட்டு இறங்கிவந்து மனித வாழ்வின் மையமாகச் செயல்படுவது சரணாகதி.

கண்டமான அகந்தை அகண்டத்தால் கிரகிக்கப்படுகிறது. பிரம்மம் அகண்டம், பரமாத்மா அகண்டம். உலகமும், உலகத்திலுள்ள ஜீவராசிகளும் கண்டம். அகண்டம் விரும்பி தன் நிலையை விட்டுக்கொடுத்துக் கண்டமாகிறது. அது சிருஷ்டி. கண்டம் தன் நிலையை விட்டுக்கொடுத்து அகண்டத்தில் கரைய சம்மதிப்பது பரிணாமம். சரணாகதி என்ற தத்துவம் சிருஷ்டியில் பரிணாமத்தில் காண்கிறோம். பொதுச்சேவையில் உள்ள இளைஞன் தன் வாழ்வின் முன்னேற்றத்தை விட்டுக்கொடுத்துப் பொதுமக்களின் வாழ்வில் தன் வாழ்வைக் கரைத்துக்கொள்வது சரணாகதியாகும். கண்டம் தன்னுடைய ரூபம், சுபாவத்தை அழிக்க சம்மதிப்பது சரணாகதி. இதைத் தத்துவமாக நாம் காண்கிறோம். எல்லா மக்களுடைய வாழ்வில் இது இருந்தாலும் நாம் பெரிய தலைவர்களின் வாழ்வில் மட்டுமே இவற்றைக் காண்கிறோம்.

அறிவு உணர்விலிருந்து விலகி ஞானமாகிறது. அறிவும், உணர்வும் அனைவருடைய ஆனந்தம். ஆனந்தத்தை நாம் காண்பதே உணர்ச்சியால்தான். உணர்வு அறிவை அடைந்து அதற்கு உற்சாகம் கொடுக்கிறது. கிரிக்கெட் விளையாடும் சிறுவர்களுக்கும், நாட்டு விடுதலைக்காகத் தியாகம் செய்யும் தலைவர்களுக்கும் வீராவேசம் கொடுப்பது உணர்ச்சி. உணர்ச்சியை, தேச பக்தியாக்குவது அறிவு. தேசத்திற்காக உயிரை விடுவதே அவர்களுக்கு மகிழ்வு. எல்லா நாடுகளிலும் இதை நாம் காண்கிறோம். குழந்தை வளர்க்கும் தாயாரும், கோபுரம் கட்டும் கொத்தனாரும், கொல்லையில் பயிரிடும் கூலிக்காரனும் உணர்ச்சி வசப்பட்டு உலகத்தைக் கவர்கிறான். ஞானம் என்பது பெரியது, ஞானிகளுக்கேயுரியது. வாழ்க்கையைத்



துலக்கித் தவம் செய்து பெறுவது. வாழ்க்கையைத் துலக்கும்போது உணர்ச்சி விலகுகிறது. உணர்ச்சி விலகியபின் அறிவு ஆனந்தமாகப் பரிமளிக்கிறது. ஆனந்தம் ஞானத்தின் பக்தி, உருவம். ஸ்ரீ அரவிந்தர் ஆனந்தத்தை அறிவின் அன்பு உருவம் என்று கூறுகிறார். உலகிற்கே உணர்வளிக்கும் உணர்ச்சி தன்னை இழக்க சம்மதிப்பதும் அனைவருக்கும் தலைவனாக விளங்கும் அறிவு தன் விறுவிறுப்பை விட்டுக்கொடுப்பதும் சரணாகதிக்குச் சிறப்பான உதாரணங்கள்.

ஹிருதய சமுத்திரம் நம் வாழ்வை ஏற்கிறது. ஹிருதய சமுத்திரம் என்பது சத் புருஷன் சக்தியாக மாறி சலனமற்று இருக்கும் நிலை. சிருஷ்டி, பிரபஞ்சம், உலகம் என்பன சலனமற்ற சமுத்திரத்தின் சலனத்தால் ஏற்பட்டன. இந்தச் சமுத்திரத்தை அகண்டம் என்பதைவிட பிரம்மாண்டம் என்று கூறலாம். நாம் என்பது அதில் ஒரு கடுகு. சமுத்திரத்திற்கு நாம் முக்கியம் என்பதே சரணாகதியின் உச்சக்கட்டம். சமுத்திரம் நம்மை ஏற்க முன்வருவது அறிவிற்கு எட்டாதது. அப்படி இருந்தாலும் நாம் நம் சிறு எல்லையைக் கடந்து வெளிவருவது நமக்கு முக்கியமான சரணாகதி. சமுத்திரம் நம் சரணாகதியை ஏற்று நம் வாழ்வை நடத்துகிறது. நம்மைச் சமுத்திரம் ஏற்பதை நாம் ஏற்பது சரணாகதி.

மற்ற தத்துவங்களைக் கீழ்கண்டவாறு கூறலாம்.

- *பிரகிருதி புருஷனின் சக்தி.*
- *ஆனந்தம் பொருள்களில் வெளிப்பட்டுப் பேரானந்தமாகிறது.*
- *உலகை உற்பத்தி செய்த மாயை தன்னை மறந்த ஆண்டவனுக்கு நினைவுபடுத்தி அவனைத் தேடி ஆனந்தம் தருகிறது.*
- *மனம் உடலுடன் கலந்ததிலிருந்து விழித்து வாழ்விலிருந்து விடுபட்டுத் தன்னிலிருந்தும் விடுபட்டு சத்திய ஜீவியத்தைக் காண்கிறது.*
- *அகந்தை கரைந்து சைத்தியப் புருஷனாகி பிரபஞ்சம் முழுவதும்*

பரவி மீண்டும் சக்தியும் ஜீவியமும் சேர்கின்றன.

- ஜடம் சத்தின் ஆனந்தமான சச்சிதானந்தம்.
- ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இணைந்து பிரம்மமாகின்றன.
- எழுவகை அஞ்ஞானம் கரைகின்றன.
- மேல்மனம், உள்மனம் வழி அடிமனத்தை அடைகிறது.
- இலட்சியம் எல்லா நிலைகளையும் கடந்து இருப்பதில் முடிவடைகிறது.
- மூன்று திருவுருமாற்றங்கள்.
- புறம் அகமாகிறது.
- திருவுருமாற்றம் உலகை, பூலோகச் சொர்க்கமாக்குகிறது.
- பிரம்மத்திற்கு அஞ்ஞானம் சலிப்புத் தருகிறது.

*தொடரும்....*

☆ ☆ ☆

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தான் கட்டுப்படவேண்டிய நிர்பந்தமில்லாத இடத்தில், தன்னை அழித்து, அன்பாலும், அடக்கத்தாலும் அடுத்தவருக்குப் பணிந்து போகும் பண்பே வாழ்வில் சரணாகதிக்குச் சமமானது.

*அன்பும், அடக்கமும் வாழ்வில் சரணாகதி.*



# அன்பர் கடிதம்

ஸ்ரீ அரவிந்த அன்னையே சரணம்.

அன்புக் கடலான என் அன்னையே! தங்களின் கருணையே கருணை! நடக்கமுடியாத அதிசயத்தை நிகழ்த்தி காட்டியுள்ள அற்புதத்தை என்னவென்று சொல்ல!

கோவையில் என் பேத்தி தீபா (அவளும் தங்களை ஆராதனை செய்கிறவள்) தலைப் பிரசவத்திற்காகத் தங்களை வேண்டிக் கொண்டே, தங்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டே சென்றிருந்தேன்.

டாக்டர் சொன்ன டயம் தாண்டி சாதாரண செக்கப்புக்காக சென்றவர்கள் ஆஸ்பிட்டலில் தங்க, பின்பு நானும் துணைக்குச் சென்று தங்களை அழைத்துக் கொண்டேயிருந்தேன். விடிய விடிய இருந்த வலி விடிந்ததும் குறைந்தேவிட்டது. வீட்டிற்குப் போகலாம் நாலு நாள் ஆகலாமென்றனர். நான் கூறியது வேண்டாம், இன்றும் நாளையும் இங்கிருப்போம் என்பதை ஏற்றுக் கொண்டு மறுமுயற்சி செய்ததில் வலி ஏற்பட்டுவிட்டது. ஆனால் வழி சரியாக விசாலமாகாத காரணத்தால் 1½ மணிக்கு ஆகலாம் என்று கூறினார் டாக்டர். தங்களை இடைவிடாமல் அழைத்துக் கொண்டேயிருந்தேன். இன்று பிறக்கணும், இந்த நாள் நல்ல நாள் என்று வேண்டிக் கொண்டு சாப்பிடச் சென்ற ½ மணியில் வந்தவள் சிசுவின் சிரசு உதயம் கண்டு அவசரமாகத் துணைக்கு டாக்டரை அழைத்து பரபரப்புடன் செயல்பட, பேத்தியும் டாக்டருடன் ஒத்துழைக்க ½ மணிக்கும் குறைவான நேரத்தில் மதியம் 3.44க்குச் சுகபிரசவம், டாக்டர்களே ஆச்சரியப்படும் அளவில்.

பிரசவத்திற்குப் போகுமுன் தங்களின் blessing packet பேத்தியிடம் தந்துவிட்டேன். என் ஆனந்தத்தைச் சொற்களால்

விவரிக்க இயலவில்லை. அப்படி ஒரு மனநிறைவு. கருணைக் கடலான என் அன்னையே நடக்க முடியாததை எளிதாக நடத்திக் காட்டும் என் அன்புக் கடலே சாஷ்டாங்கமாகத் தங்கள் திருவடியில் படிந்து நன்றி கூறிக் கொண்டேயிருக்கிறேன்.

திடீரென சோதனை, பிறந்த குழந்தைக்கு 2 நாட்களாக நீர் பிரியவே இல்லை. அனைவருக்கும் கவலை. டாக்டர் I.V. போடனும் என்றனர். சின்ன சிசுவுக்கு இப்படியொரு சிரமமா.

அன்னையே, நான் வந்து பிரசவம் பார்த்ததில் இப்படியொரு பிரச்னையா என மனமுருகித் தங்களையே வேண்டிக்கொண்டேன். இயற்கையாக நீர் பிரிந்து, தாயும் சேயும் நலமாக வீட்டில் சேர்ப்பிக்கனும் என்று.

சிசுவிற்கு ஆகாரம் தரும் நேரம் தங்களின் தாரக மந்திரத்தைச் சொல்லியே தருவேன். அதே போலச் சாதாரண நீர் எடுத்துத் தங்களை வேண்டிக் கொண்டு குழந்தைக்கு ஊட்டிவிட்டுத் தங்களை பிரார்த்தனை செய்து கொண்டேயிருந்தேன்.

அப்பப்பா அதிசயத்திலும் அதிசயம் 1 மணி நேரம் கூட ஆகவில்லை. குழந்தைக்கு மிகச் சரளமாக நீர் பிரிந்தது, பிறகு விட்டுவிட்டு. ஆனந்தத்திற்கு அளவேயில்லை. நான் சென்ற காரியம் சிறப்பாக அனைவருக்கும் சந்தோஷமளிக்கும் விதத்தில் தங்களருளால் நிறைவு அடைந்துவிட்டது. மனம் நிறைய நன்றி சொல்லிக்கொண்டே தாயையும் சேயையும் அவர்கள் வீட்டில் சேர்த்து அங்கிருந்தே (காலை) தங்களுக்குக் காணிக்கையைச் செலுத்திவிட்டு நிம்மதியாக வந்து விட்டேன்.

சரணம் அம்மா! சரணம் அம்மா!

❊ ❊ ❊





## புலன்களுக்குப் புலப்படாதது

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

இல. சுந்தரி

பாட்டியைக் கேட்டுத்தானே எழுதினேன், விடை தவறா? என்றாள் இயல்பாக.

இல்லை கண்ணே. தவறில்லை. தவறான விடையை அவர் எப்போதுமே சொல்லித் தர மாட்டார், என்று கூறும்போதே மீராவின் கண்ணில் கண்ணீர்ப் பெருக்கெடுத்தது.

ஏன் அழறீங்க ஆண்ட்டி? என்றாள் சிறுமி. அழவில்லையடா உன் அன்பை எண்ணிக் கண்ணீர் வந்தது. இது அழுகையில்லை. ஆனந்தம் என்று கூறி அன்னையின் திவ்ய தரிசனத்தையும், திருக்குரலையும் பெற்று வெளிப்படுத்திய இச்சிறுமியில் அன்னையைத் தரிசித்தாள். அப்படியே அவளை அணைத்துக் கொண்டாள்.

கவலையும், கபடுமற்ற சிறுமி அமைதியாக உறங்கினாள்.

அன்னை எப்போதும் எல்லோரிடமும் ஒரே மாதிரியாய்த்தான் கருணையைப் பொழிகிறார். இவள் போன்ற விழிப்பான ஆத்மாக்கள் பெற்றுக் கொள்கின்றன. அகங்காரத் திரையிட்டு மறைத்துக் கொள்பவர்க்கு அவரைப் பார்க்க முடியவில்லை.

ஒரு பிரார்த்தனைப் புத்தகத்தை எடுத்து பிரிக்க,

*''எம்மனே! நீ என்னை ஆச்சர்யத்தின் நுழைவாயிலில் வைத்திருக்கிறாய். இந்த ஞானத்தில் என்னை உறுதியாக்கு. எங்கிருந்து*

*வந்தால் என் செயல்களெல்லாம் நினது தர்மத்தின் கலப்பற்ற விளக்கமாக இருக்குமோ அந்த உணர்வு மையத்தில் என்னை நிலையாக இருக்கச் செய் என்பதைத் தவிர வேறென்ன சொல்ல",*

படித்ததும் தெளிந்தாள். இங்கு நடந்தவை யாவும் அன்னையின் வெளிப்பாடு. இதனைப் பெருமையுடன் பறைசாற்ற அவளுக்கு அனுமதியில்லை. மக்கள் இதைச் சித்து விளையாட்டாய் திசை திருப்பி புனிதத்தை மாசுபடுத்திவிடுவர். உரிய பருவத்தில் அன்னையே சிறுமிக்கு யாவும் உணர்த்துவார் என்றெண்ணி மீண்டும் புத்தகத்தைப் பிரித்தாள்.

*"எம்மனே! நின்னைப் போற்றுகிறேன். நின்னை வணங்குகிறேன். ஆனால் எழுத மாட்டேன். ஏனெனில் இந்தத் தியானத்தைப் பற்றிய ஒரு கேள்விக்கு அளித்த பதிலில் நீ இப்பொழுதுதான் என்னிடத்தில் இப்படிக் கூறினாய்: நாம் இப்பொழுது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாத சொந்த உரையாடல் ஒன்று நிகழ்த்தினோம். அதை உன்னுடைய தூலச் செவிகள் கூடக் கேட்கக் கூடாது" என்றிருந்தது.*

தன் ஸ்தூல செவிகூட கேட்கக் கூடாததை நம் ஸ்தூல செவிகளுக்கு மீராவால் எப்படிக் கூறமுடியும்?

- *முற்றும்* -

✣✣✣



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

தம்பி - இரகஸ்யம் ACT செயல் என்பதைப் புரிந்து கொள்வதிலிருக்கிறது என்கிறீர்களா?

அண்ணன் - செயலுக்கு ராசியுண்டு, குணம் உண்டு, structure அமைப்புண்டு. ஒரு செயலைப் பூரணமாகப் புரிந்து கொண்டால் உலகமே அதனுள் அடக்கம். அதன் மூலம் உலகை ஆளும் திறன் எழும் என்பது ஆன்மீக அடிப்படை. அணுவினுள் பெருஞ்சக்தி மறைந்து இருப்பதைப்போல, இரகஸ்யம் எளியது, பெரியது.

- கடவுள்கள் மனிதனோடு தொடர்புள்ளவரில்லை.
- அன்னை கடவுள்களுடைய தாயார்.
- பிரம்மத்துடன் நேரடியாக, நிரந்தரமான தொடர்புடையவர்.
- பிரம்மம் அனந்தம்.
- நம்மை அன்னை தேடி வருகிறார்.
- நேரடியாக அன்னையை ஏற்பது, சரணாகதி. அது பூரணயோகம்.
- நாம் எதன் மூலமாக - வளம், படிப்பு, தொழில், செயல் (act) - அன்னையை ஏற்கிறோமோ அதற்கு அனந்தமுண்டு. (செயல் அனந்தமானது).
- நாம் செய்வதன் infinityயை அறிந்தால், அன்னை அதன் மூலம் நமக்கு INFINITY, பிரம்மத்தைக் காட்டுகிறார்.

✷ குழந்தை நிருபமா பெற்றோர்களுக்கு அன்னையை உணர்த்தும் கருவி.

✷ பெற்றோர் அன்னையை ஏற்றால், நிருபமா genius மேதையாகும்.

✷ நிருபமாவின் மேதாவிலாசத்தைக் கண்டால், பெற்றோர் அன்னையை அறியலாம்.

தம்பி – அன்னை அனந்தம், infinity, பிரம்மம். நம்மைத் தேடி வருகிறார். அவரை யோகமாக ஏற்க சரணாகதியை மேற்கொள்ள வேண்டும். வாழ்வில் ஏற்க நாம் செய்வது infinite ஆகப் பலிக்கவேண்டும் என்று கூறுகிறீர்களா?

அண்ணன் – ✷ உலகில் வறுமை, துன்பம், நோய், மரணமுண்டு.

✷ அன்னை வளமை, இன்பம், ஆரோக்கியம், நித்தியம்.

✷ ஒருவர் அன்னையை சரணடைந்தால் உலகில் இவை அழியும்.

✷ ஒருவர் செயலில் அன்னையை ஏற்றால், வாழ்வில் உலகப் பிரசித்தி பெறுவார்.

✷ மனிதனைப் பிரம்மமாக்கும் சக்தி அன்னை.

✷ மனிதனைத் தெய்வமாக்குவது அன்னை.

✷ அது முடியாதவர், வாழ்வில் பேரதிர்ஷ்டத்தைப் பெறலாம் என்பதே அன்னை நமக்குச் சொல்லும் ஆன்மீகச் செய்தி. ஏற்க வாரீர் என அன்னை அழைக்கிறார்.



தம்பி – இப்படிச் சொல்லலாமா? படிப்பில் முக்கியம் குழந்தையின் மனம். நாம் சொல்லிக் கொடுக்கும்வரை படிப்புக்கு ஜீவனிருக்காது. குழந்தையே ஆர்வத்துடன் படித்தால் படிப்புக்கு ஜீவன் வரும், படிப்பு அனந்தமாகும். அதை இந்தப் பெற்றோர் செய்துவிட்டனர். படிப்பு என்பது மனம். மனம் ஜீவனின் பகுதி.

**படிப்பில் ஜீவனைக் கண்டதுபோல், குழந்தையில் ஜீவனைக் காண்பது அடுத்தது.**

அண்ணன் – சரியான விளக்கம். படிப்பு மனத்துடையது, முதற்படி. குழந்தை ஜீவனுக்குரியது, அடுத்த கட்டம். படிப்பைப் போற்றியதுபோல் இப்பெற்றோர் குழந்தையின் ஜீவனைப் போற்றினால், குழந்தை உலகப் பிரசித்தி பெறுவாள். அதுவே சிறிய பலன். அதேபோல் உலகிலுள்ள குழந்தைகள் அனைவரும் பிரசித்தி பெறுவது அடுத்த பெரிய பலன்.

தம்பி – இத்தனை வருடம் கழித்து அன்னையை இப்பொழுதுதான் புரிவது போலிருக்கின்றது.

அண்ணன் – இந்தச் செய்தியை நான் அடுத்த கட்டம், இரண்டாம் கட்டம், அன்னையை அதிகமாக ஏற்பது, அதிர்ஷ்டம் பெறுவது, 10 மடங்கு வருமானம் பெருகுவது எனப் பல ரூபங்களில் சொல்ல முயல்கிறேன்.

தம்பி – சொன்னால் எடுபடாது, செய்தால் நடைபெறும்.

அண்ணன் – செய்வதைப் பூரணமாகச் செய்தால் பலரும் பின்பற்றுவர். அப்படியில்லாவிட்டால் சூட்சுமமாக உலகில் பரவும்.

தம்பி - முதலில் ஆங்கிலத்திலும், விவசாயத்திலும், கிராமப் புணருத்தாரணத்திலும், நாடு வளம் பெறுவதிலும், வேலையில்லாத் திண்டாட்டத்தை அழிப்பதிலும், வன்முறையை நிறுத்துவதிலும் கண்டோம். இனி குழந்தைகள் படிப்பு, பெருவாரியான பணவரவு, நிரந்தரமான அதிர்ஷ்டம் ஆகியவற்றில் காணவேண்டும். ஒருவருடைய சிறப்பு உலகைக் காப்பாற்றும் என்பதை நாம் ஏற்று, அச்சிறப்பைப் பெற முயலவேண்டும்.

அண்ணன் - இவற்றிற்கெல்லாம் கரு, அன்னை யார், எப்படி நம் வாழ்வில் செயல்படுகிறார்கள் என அறிவது.

தம்பி - நம் நிலையிலிருந்து அன்னை நிலைவரை சொல்லிப் பார்த்தால் விளங்குமா?

அண்ணன் -

| **நாம்** | **அன்னை** |
|---|---|
| சுயநலம் | பரநலம் |
| சுருக்கம் | பெருக்கம் |
| மனம் | சத்திய ஜீவியம் |
| வலி | ஆனந்தம் |
| வறுமை | வளம் |
| சிறியது | பெரியது |
| உலகம் | பிரபஞ்சம் |
| கவலை | சந்தோஷம் |
| தோல்வி | நிரந்தரமான வெற்றி |
| கெட்ட எண்ணம் | நல்லெண்ணம் |

**நம் குணங்களிலிருந்து அன்னை குணங்களுக்குப் போனால் வாழ்வில் அதிர்ஷ்டம் வரும்.**
**குணங்களையே கடந்து வந்தால் யோகம் பலிக்கும்.**



தம்பி - செயலுக்கு ராசி, குணம், அம்சம் உண்டு என்றால் என்ன?

அண்ணன் - நாம் சகுனம், பல்லி சொல்லுக்குப் பலன், விழுவதற்குப் பலன், சாஸ்திரம் என பலவற்றைச் சொல்கிறோம். படித்துவிட்டால், இவையெல்லாம் மூடநம்பிக்கைகள் என்கிறோம். நான் ஏற்கனவே சொன்ன கதையில் லிடியா, ராணுவ ஆபீசர் முகாமுக்குப் போகிறாள். வண்டியில் ஏறும்பொழுது கால் இடறுகிறது. இது மேல்நாட்டுச் சினிமா. அவர்கட்குச் சாஸ்திரம் தெரியாது. திரும்பி வருகிறாள். ஓடிப் போகிறாள். ஓடிப்போவதை கால் இடறுவது காட்டுகிறது. நடந்த விஷயங்களை நினைத்துப் பார். நல்லதாக முடிந்தவை, கெட்டதாக முடிந்தவை ஆரம்பத்திலிருந்தே காட்டும். முக்கியமாக முதல் முறை ஆசிரமம் வந்ததை நினைத்துப் பார். இன்று உன் நிலைமையை அது விளக்கும்.

தம்பி - இதுதான் தெரியுமே. ஆயிரம் உதாரணம் உண்டு. திருமணமான அன்று வாழ்வு சுடுகாடாகிவிட்டது என 15, 20 வருஷமாகப் பதறியவர், சற்று நிதானித்து முதல் முறை அவர் பெண் வீட்டாரோடு சம்பந்தம் பெற்ற நாளை நினைவு கூறினார். அவர்கள் வீட்டில் காலையில் அவர் சாப்பிட்ட காபியும், 24 மணி நேரத்திற்குள் அவர் தலைமீது பேரிடி விழுந்ததும் நினைவு வந்தது.

அண்ணன் - கார், துரோகம், வாழாவெட்டி, சிறப்பான ஊழியரை வேண்டாம் என்றது, எஸ்டேட் வாங்கிய நிகழ்ச்சிகள் இதை நிரூபிக்கின்றன.

தம்பி - NGO கார் வாங்கினார். நமக்கும் காருக்கும் என்ன சம்பந்தம் என நினைத்துப் பார்த்தார். முதல் முறை அவர் தரிசனத்திற்கு வரும்பொழுது திருவிழா நாள் என்பதால் பஸ் கூட்டமாகி இடமில்லாமல், உடனிருப்பவர் கார் ஏற்பாடு செய்தது நினைவு வந்தது. 12 வருஷங் கழித்து வரப்போகும் கார் முதல் நாளே அறிவித்துவிட்டது. நாம் கூறும் உதாரணத்தைவிட அன்பர்கள் முதல் முறை ஆசிரமம் வந்தபொழுது நடந்ததும், பிறகு இன்றுவரை அவர்கள் வாழ்வும் மிகத் தெளிவாகத் தொடர்பைக் காட்டும்.

அண்ணன் - செயலை அலசி, ஆராய்ந்து பார்த்தால், அதுவும் கடந்து போனதை ஆராய்ந்தால் தொடர்பு, விவரம் புரியும்.

தம்பி - சம்பளமும், இலாபத்தில் 5% பங்கும் எனக் கம்பனியில் மானேஜரானவர், இன்று தன் பெருஞ்சொத்து எப்படி வந்தது எனச் சிந்தித்தார். முதற் கம்பனியில் அவர் முதல் வருஷத்தில் மிகுந்த இலாபம் எடுத்துக் கொடுத்தபொழுது முதலாளி 5%க்குப் பதில் 10% கொடுத்தார். மானேஜர் 5% போதும் என்று 10%ஐ மறுத்துவிட்டார். முதல் வருஷம் 5 மாறி 10 ஆனது வளர்ச்சியைக் காட்டுகிறது. Short term கைக்கு மெய்யான ஆதாயத்தைக் கருதாது நீண்ட நாள் சேவையை மானேஜர் பாராட்டியதால் பெருஞ்சொத்து வந்தது.

அண்ணன் - நாம் முறையோடு செய்யும் காரியங்கள் முதலிலேயே அபரிமிதமாகப் பலனைக் காண்பிப்பது அளவு கடந்த வளர்ச்சிக்கு அறிகுறி.



தம்பி - தோட்டம் வாங்கியவர் முதல் அறுவடையைத் திருடன் கொண்டுபோனான் என்றார். 10 ஆண்டுகளில் தோட்டம் அவர் கையை விட்டுப் போயிற்று.

ஒரு ஸ்தாபனத்தில் ஒரு முக்கிய ஊழியர் துரோகம் செய்தபொழுது ஸ்தாபகர் அவருடைய முதல் கடிதத்தில் தன்னை “வைரம்” என விவரித்ததைக் கூறினார். தன்னையே ஒருவர் ‘‘வைரம்’’ என்றால் அது உண்மையிலேயே “கரி” என்று பொருள். பின்னால் வரும் துரோகத்தை “வைரம்” சுட்டிக்காட்டுகிறது.

அண்ணன் - நாம் சகுனம் எனப் பல குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறோம். நிறைகுடம், சுமங்கலி நல்ல சகுனம் என்கிறோம். இப்புதிய கண்ணோட்டத்தில் எல்லாச் செயல்களும், அசைவுகளும் சகுனங்களாகும். நாம் அனுபவத்தால் அதை அறியவேண்டும்.

தம்பி - மார்வாரியிடம் நிலம் வாங்கப் பணம் கேட்கலாம் என்று ஓர் அன்பர் போனபொழுது, வழக்கத்திற்கு மாறாக அன்பரின் முதலாளியை மார்வாரி “நானே வந்து அவரைப் பார்க்கிறேன்” என்றார். முதலாளி பணம் வேண்டும் என்றார். அதேயிடத்தில் மார்வாரி சம்மதம் தெரிவித்தார். பிறகு நிலம் எளிமையாக ரிஜிஸ்டர் ஆயிற்று. அதே மார்வாரி நிலத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பும்பொழுது ரோடு ஓரம் உட்கார்ந்திருந்த குழந்தை ஓடிவந்து காரில் விழுந்தது. டிரைவர் மீது தவறில்லை. குழந்தையின் தவற்றுக்கு மார்வாரியிடம் பணம் கேட்டு வாங்கினர். மார்வாரிக்கு I.G. தெரியும் என்பதால் உடனே போலீஸ் வந்து காப்பாற்றியது. நிலத்தில் மார்வாரி செய்த தவற்றால் திட்டம் தோற்றபின், தான்

செய்த தவற்றுக்கு மார்வாரி அன்பரை ஈடு கேட்டார். இதைக் கார் விபத்து முன்கூட்டியே அறிவித்தது.

*தொடரும்.......*

✣✣✣

## சொஸைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 40 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 11. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 12. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 13. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 14. | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. 80 |
| 15. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 16. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |
| 17. | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. 60 |

**தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

## சமாதி புஷ்பம்

சமாதி புஷ்பம் ஒரு இதழ் கிடைப்பது அருள். அது உயிரைக் காப்பாற்றியதை நாம் அறிவோம். Blessing Packet பிளசிங் பாக்கட்டில் வருவது ஓர் இதழ். ஓர் இதழும் அற்புதத்தை நிகழ்த்தும். ஒரு கூடை சமாதி புஷ்பம் கொண்டு வந்தேன், பலனில்லையே என்பதும் ஓர் அனுபவம். மனம் சமாதி புஷ்பத்தின் சக்தியை நிர்ணயிக்கிறது. முதல் மந்திரிக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. "நான் முதல் மந்திரியை 30 வருஷமாக அறிவேன். எனக்கு எதுவும் இல்லை" என்பதும் ஓர் அனுபவம்.

**சக்தி ஏராளம். பெறுவது பக்தியைப் பொருத்தது.**

பந்த் நம் நாட்டில் எப்பொழுது வரும், எந்த அளவில் வரும் என்பது நிர்ணயமில்லை. நாள் முழுவதும் உண்டு. 6 மணிக்கு முடியும் பந்த் உண்டு. மோட்டார் பைக்கை அனுமதிப்பது உண்டு. கார் போகலாம் என்ற பந்த் உண்டு. எது, எந்த பந்தில் எப்படி அனுமதிக்கப்படும் என்பது நிலைமையைப் பொருத்தது.

பக்தர் புஷ்பம் கொண்டு போக புதுவை வந்தபின் பந்த் அறிவிக்கப்பட்டது. தியான மையத்திற்குப் புஷ்பம் போக வேண்டும். மையத்தின் சக்தி, அன்பரின் பக்தி, புஷ்பத்தின் மகிமை எது செயல்படும் என்பதை நிர்ணயிக்கும் நேரம்.

- வந்தவர் பக்தியால் உருகும் பக்தர்.
- பந்த் என்பதால் பஸ் இல்லை. பிரைவேட் கார் அனுமதிக்கப்படும் என்பது நிலை.
- புஷ்பத்திற்காக டாக்ஸி போவது அதிகச் செலவு. டாக்ஸி போகுமா என்பதும் தெரியவில்லை.
- ஏர் போர்ட்டுக்குக் கார் போகவேண்டும் என்ற செய்தி வந்தது. பக்தரும், புஷ்பமும் மையம் போய்ச் சேர்ந்தனர்.

☆ ☆ ☆

## வேலை

வேலையில்லாதவர் அன்னையிடம் வந்து வேலை பெற்றால், அது போகாது. வேலைக்கு எதிரான காரியங்களை விருப்பமாகச் செய்பவர்கட்கே அப்படி வரும். அவர்களாக மாறும்வரை அதற்குக் கதி மோட்சமில்லை.

**அன்னை பக்தர்கட்கு வேலை போகாது. நாட்டு நிலைமை மாறி வேலை போகவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டாலும் முடிவில் அன்னையும், அருளும் செயல்பட்டது தெரியும்.**

இன்ஜினியரின் தாயார் சொன்ன அனுபவம் :

"என் மகன் ராம்கோவில் இன்ஜினியராக இருக்கிறான். அவனுக்கு இலண்டன் போகும் வாய்ப்பு வந்தது. அதற்கு முன் இருமுறை மலேசியா புராஜக்ட் விஷயமாகப் போனபொழுது நல்ல பெயர். இரண்டு மாதத்திற்கு முன் softwareஇல் நெருக்கடி ஏற்பட்டு இளம் இன்ஜினியர்களை வேலை நீக்கம் செய்யும்படியான சூழல் வந்துள்ளது. என் மகனுக்கும் அதே நிலை. அவனைத் தியான மையம் போய்ப் பிரார்த்திக்கச் சொன்னேன். அவன் போனதாகத் தெரியவில்லை. நான் மகனுக்காகப் பிரார்த்தனை செய்தேன். இரண்டு மாதம் கழித்து என் மகனை வேறொரு பிராஞ்சில் போட்டு ரூ.2000 சம்பள உயர்வு கொடுத்தனர்!"

☆ ☆ ☆